596

...த்தனத்தாரால் அங்ககரிக்கப்பெற்றது.

# NEW
# TAMIL READER
## THIRD BOOK.

புதிய

# மூன்றும் பாட புத்தகம்.

REGISTRAR OF BOOKS
24 JAN 1928
MADRAS

E. M. GOPALAKRISHNA KONE,
MADURA.

...rved] 1927. [*Prics* 3½ *As.*

...xcelsior Press, Madura.

TB
031,6 ...
N27
146867

சிவிக்ஸ், துரைத்தன விளக்கம்என்னும்

# இராஜாங்கமுறை நூல்.

## நேச்சர்ஸ்டடி அல்லது இயற்கைப்பொருட்பாடம்.

E. கோவிந்தசாமி ராவ் அவர்கள் எழுதியவை.

துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பெற்றவை.

மாணவர்கட்கும் உபாத்தியாயர்கட்கும் மிகவும்அவசியமானவை.

எலிமெண்டரி பாடசாலைகளின் பாடமாக ஏற்பட்டுள்ள (சிவிக்ஸ்) துரைத்தன விளக்கம் என்னும் இராஜாங்க முறைநூல், இயற்கைப் பொருட்பாட சம்பந்தமான புத்தகங்கள் அநேகம் ஏற்பட்டிருப்பினும்; அவையாவும் நுண்ணறி வுடையோரன்றி ஏனையோர் அதன் விஷயங்களை நன்குணர்த லரிதாயிருப்பது பற்றியும, உபாத்தியாயர்கள் மாணவர்கட்குப் போதிக்கும் சிரமம் பெரிதாயிருப்பது பற்றியும் உபாத்தியாயர்கட்குச் சிரமமின்றி மாணவர்கள் இப்புத்தகத்தைப் படித்த மாத்திரத்தில் இலகுவாய் விஷயங்கள் தெரியும் வண்ணம் பரீக்ஷாதிகாரிகளின் வினாக்களை யனுசரித்தே இனிய எளிய தமிழ்நடையில் எழுதி வெளிப்படுத்தி யிருக்கின்றோம். இதனைக் கண்ணுற்ற நண்பர்கள் கைவிடமாட்டார்கள் என்று நம்புகின்றோம். தனித்தனி விலை அணா 4.

---

## தமிழ் அச்சுக்காப்பிப் புஸ்தகங்கள்.

A. நாராயணசாமி ஆச்சாரியார் செய்தது.

1 கிர். காப்பி, 2 கிர். காப்பி, 3 கிர். காப்பி, ஷை A காப்பி
4 கிர். காப்பி, 5 கிர். காப்பி. தனித்தனி விலை அணா 1

---

## செய்யுட் பாடப் புத்தகங்கள்.

உலகநீதி மூலமும் உரையும் ... ... ..... பை 9
ஆத்திசூடி மூலமும் உரையும்... .... .... பை 9
கொன்றை வேந்தன் மூலமும் உரையும் .... பை 9
வெற்றி வேற்கை மூலமும் உரையும் ... .... பை 9
மூதுரை அல்லது வாக்குண்டாம் உரையுடன் ... அணா 1
நன்னெறி மூலமும் உரையும் .... .... .... அணா $1\frac{1}{2}$

இவை மூலச்செய்யுள்கட் கேற்ற பதவுரையும், கருத்துரையும் இலக்கணக் குறிப்பும் பாடசாலைச் சிறுவர்கட்கு எற்றவாறு இலகுவான நடையில் எழுதப்பெற்றுள்ளன.

# முகவுரை.

596

இப்புத்தகத்தில் அமைந்துள்ள பாடங்கள் வித்தியா விசாரணை அதிகாரிகளின் விதிகளை அநுசரித்துப் புதிய முறைக்குப் பொருத்தமாயும், நம் தாய் மொழியாகிய தமிழ்ப் பாஷையைக் கற்கும் மாணவர் தக்க வழியிற் கற்று, மிக்க பயன் பெறுமாறும் எழுதப்பெற்றுள்ளன.

2. தொடர் முறைப் போதனைக்கும் பொருந்தியுள்ளன.

3. பாடங்கள் பெரும்பான்மை பொருட்பாட சம்பந்தமாகவும், நீதிக்கதை சம்பந்தமாகவும், சிறு பான்மை பாட்டுக்களாகவும் தொகுக்கப்பெற்றுள்ளன.

4. நீதிபோத சம்பந்தமான பாடங்கள் சிறுவர்கள் மன வெறுப்பு அடையாமல், உற்சாகத்துடன் படிக்குமாறு வேடிக்கையானதும், விளையாட்டானதுமான கதைகளாக எழுதப் பெற்றுள்ளன.

5. முதலில் தெய்வ வணக்கப் பாடல்களும், ராஜவணக்கப் பாடல்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இவை சிறுவர்மனதில் நன்கு பதிந்தால் பருவ காலத்தில் தெய்வ பக்தி, ராஜ விசுவாசம் அபிவிருத்தியாகி, நலம் பெறுவார்கள் என்னும் நன் னோக்கத்தோடு எழுதப்பெற்றுள்ளன.

6. சில பாடங்கள் மாணவரைக்கொண்டு நாடகமாக நடத்துதற்கும் நன்கு அமைந்துள்ளன.

7. இப்புத்தகத்தைக் கண்ணுறும் போதனை ஆசிரியர்கள் இதனை நன்கு ஆதரிப்பார்கள் என்று நம்புகிறேன்.

நூலாசிரியன்.

# கடவுள் துதி.

---

"தலையே! நீ வணங்காய்" என்ற பாடலின் சந்தம்.

---

ஆதிபரம் பொருளே-முதல்
ஆதாரமாம் பொருளே
அங்கும் இங்கும் எங்கும் தங்கும் (ஆ)

சோதி சுயம் பொருளே-நல்ல
தூய பரம் பொருளே
சுத்தா முத்தா அத்தா நித்தா (சோ)

பணிவோம் நின்பதமே-சிறு
பாலரனு தினமே
பகரும் கல்வி ஞானந் தரவே (ப)

அகிலந் துதி பொருளே-எங்கள்
ஐந்தாம் ஜார்ஜ் மன்னர்
அன்னை மேரி யார்க்க ருளும் (அ)

வற்றாத பாக்கியமே-பெற
வாழ்த்தி வணங்குவமே
மக்களுக்கே இக்கணமருள் (வ)

146867
சென்னை-600 008



## நமது இந்திய சக்கரவர்த்தியாகிய

# ஐந்தாம்-ஜார்ஜ் மகிபர்மீது

## வாழ்த்துப் பாட்டு.

"குற்றம் நீ குணங்கள் நீ" என்ற பாடலின் சந்தம்.

---

மானிலத்தோர் போற்றும் ஐந்தாம்
ஜார்ஜுமன்னர் வாழ்கவே
மகிமையோங்கும் மேரியன்னை
மக்கள் சுற்றம் வாழ்கவே

ஆனகல்விக் கா நிதியம்
அருளும் வள்ளல் வாழ்கவே
அரசர் ஏத்தும் ஏழாம் எட்வர்ட்
அரும் புதல்வர் வாழ்கவே

ஆதிபகவன் கிருபையாலே
அரசும் புகழும் வாழ்கவே
அன்பர் இந்த்யா சக்கரவர்த்தி
அவனிமீது வாழ்கவே

# பொருள் அடக்கம்.

—(*)—


| எண். | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| 1. | மாதா, பிதா, குரு, தெய்வம் | 9 |
| 2. | நமது சக்கரவர்த்தி | 11 |
| 3. | கிளி | 13 |
| 4. | வேப்பமரம் | 15 |
| 5. | கோழி | 17 |
| 6. | ஆடுகள் | 20 |
| 7. | தென்னைமரமும், பனைமரமும் | 23 |
| 8. | இந்திய நாணயங்கள் | 25 |
| 9. | வாத்து | 28 |
| 10. | காகிதம் | 30 |
| 11. | குரங்கு | 32 |
| 12. | எருமை | 34 |
| 13. | ஆமை | 35 |
| 14. | மீன் | 37 |
| 15. | தேகப்பயிற்சி | 40 |
| 16. | கிராம அதிகாரிகள் | 43 |
| 17. | போலீஸ்காரன் | 45 |

| எண். | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| 18. | உலோகங்கள் | 47 |
| 19. | மழை | 50 |
| 20. | பிட்டுக்கு மண் சுமந்தது | 52 |
| 21. | தண்டுகள் | 55 |
| 22. | கல் எறிந்ததால் வந்த கஷ்டம் | 57 |
| 23. | கெடுவான் கேடு நினைப்பான் | 58 |
| 24. | பயிரிடும் நிலங்கள் | 60 |
| 25. | மூத்தோர் சொல்லைத் தட்டாதே | 62 |
| 26. | கேலியினால் வந்த கெடுதி | 64 |
| 27. | ஷை பாட்டு | 66 |
| 28. | படிப்பினால் பணம் வந்தது | 67 |
| 29. | நன்றியுள்ள சிறுவன் | 68 |
| 30. | ஷை இரண்டாம் பாகம் | 71 |
| 31. | கடிதம் எழுதும் முறை | 74 |
| 32. | விடு கதைகள் | 76 |
| | ஆத்திசூடி | 77 |
| | கொன்றை வேந்தன் | 79 |

புதிய

# மூன்றாம் பாடபுத்தகம்.



## 1. மாதா, பிதா, குரு, தெய்வம்.

1. மனம் மகிழ்வுடன் பத்துமாதம் நம்மைச் சுமந்து பெற்றவள் நமது தாய். பால் ஊட்டி, சீராட்டி, பக்குவமாய் வளர்த்தவளும் நமது மாதா.

2. அன்புடன் நற்புத்தி புகட்டி, நல்ல வழியில் நம்மை நடத்தி வருபவர் நமது பிதா.

துஷ்டருடைய சிநேகம் துன்பம் தருமென்று கண்டித்துக் காப்பவரும் நமது தந்தை. நாம் நல்வழியில் நடப்பதும் நன்றாகப் படிப்பதும் அவருக்குப் பிரியம்.

3. இளமைப் பருவத்தில் நமக்கு நாள் தோறும் கல்வியை நலமாய்ப் போதிப்பவர் நமது குரு.

4. நம்மையும், நாம் பார்க்கும் எல்லா வஸ்துக்களையும் படைத்தவர் கடவுள். உலகத்தில் உள்ள எல்லா ஜீவராசிகளையும் காப்பவர் கடவுள். அவர் எங்கும் நிறைந்தவர். எல்லாம் அறிந்தவர். அவருக்குத் தெரியாமல், நாம் ஒன்றும் செய்ய முடியாது. ஆதியும், அந்தமும் அவருக்கு இல்லை.

5. நாம் துஷ்டருடன் கூடி, கெட்ட காரியங்கள் செய்தால், அவருக்கு நம்மிடம் வெறுப்பு உண்டாகும். நாம் நல்லவரோடு சேருவதும், நல்ல வழியில் நடப்பதும் அவருக்குப் பிரியம். அவருக்கு விருப்பமாக நடந்து கொள்வதே நமது கடமை.

6. நாம்எப்பொழுதும்கடவுளைத் துதித்து வணங்க வேண்டும். தம்மை வணங்கினவருக்கு அவர் நன்மை செய்வார்.

கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.



## 2. நமது சக்கரவர்த்தி.

1. இவர் நம்மை ஆள்பவர். இவர் இங்கிலாந்து தேசத்தில் இருக்கிறார். ஒரு தேசத்தை ஆள்பவனுக்கு அரசன் என்று பெயர். பல தேசங்களை ஆளும் அரசனுக்குச் சக்கரவர்த்தி என்று பெயர். இவர் இங்கிலாந்து தேசத்துக்கு அரசர். நமது தேசத்துக்குச் சக்கரவர்த்தி.

2. இவர் நமது இந்தியா தேசத்தையும், இன்னும் பல நாடுகளையும் ஆண்டு வருகிறார். இவர் பெயர் மாட்சிமை தங்கிய ஐந்தாம் ஜார்ஜ்

சக்கரவர்த்தி. இவர் நம்மை அன்புடன் ஆண்ட ஏழாம் எட்வர்ட் சக்கரவர்த்தியின் குமாரர். விக்டோரியா மஹாராணியாரின் பேரர். இவர் மனைவியார் மேரி மஹா ராணியார்.

3. நமது தேசமாகிய இந்தியாவுக்கு இவர் இரு முறை வந்திருக்கிறார். தம் தகப்பனார் அரசாளும் போது, இவர் இந்தியாவைச் சுற்றிப் பார்ப்பதற்காக வந்தார். பிறகு இந்தியா சக்கரவர்த்தியாக மகுடாபிஷேகம் செய்து கொள்ள மறுபடியும் வந்தார்.

4. இந்தியாவில் முற்காலத்து அரசர்களுக்கு, டில்லி தலைநகராயிருந்தது. இவருக்கு டில்லி நகரில் 1911-ம் வருஷம், டிசம்பர் மாதம் 12-ந்தேதி மகுடாபிஷேகம் சிறப்பாய் நடந்தது. அச்சமயம் பல சிற்றரசர்களும், ஜமீன்தார்களும் கூடியிருந்தனர்.

5. இவர் தம் மகுடாபிஷேக தினத்தில், நமது நாட்டில் கல்வி விருத்திக்கு அதிகப் பொருள் உதவி செய்வதாக வாக்களித்தார். அப்படியே செய்துவருகிறார். இவர் நம்மீது மிக்க அன்பு உள்ளவர்.

6. கடவுள் இவருக்கு ஆயுள் விருத்தியும், சுக வாழ்வும் கொடுத்து, இவர் அரசாட்சி நீடூழி ஓங்கவும் கருணை செய்வாராக.

வாழ்க அரசன், கடவுள் அருளால்.

# 3. கிளி.



1. பிள்ளைகளே! சில வீடுகளில் கிளி வளர்த்து வருவதைப் பார்த் திருப்பீர்கள். கிளி வீட்டில் வளர்ந் தாலும், அதுவீட்டுப் பக்ஷி அல்ல; காட்டுப் பக்ஷியே. காடுகளில் அது தன் இஷ்டம் போல் பறந்து திரியும்.

2. சிறு குஞ்சாக இருக்கும்போது, அதை எடுத்து வளர்ப்பதுண்டு. அது பெரிதானல் காட்டுக்குப் பறந்து போய்விடும். அப்படிப் பறந்து போய் விடாமலும், பூனை முதலிய பிராணிகள் அதைப் பிடித்துத் தின்றுவிடாமலும் காப்பதற்கு அதைக் கூண்டில் வளர்க்கிறார்கள்.

3. பறவைகளில் கிளி மிகவும் அழகானது. கிளிகளில் பச்சைக்கிளி, வெள்ளைக்கிளி, பஞ்ச வர்ணக்கிளி, எனப் பல வகை உண்டு.

4. பஞ்சவர்ணக் கிளியின் இறகுகளில் பச்சை, சிவப்பு, மஞ்சள், நீலம், வெண்மை ஆகிய ஐந்து நிறங்களும் காணப்படும். இது பார்ப்பதற்கு அதிக அழகாய் இருக்கும்.

5. பச்சைக்கிளியின் இறகுகள் பசுமை நிற மானவை; அலகு சிவப்பு நிறம். அதன் கழுத்தில் கருஷ்ம நிறமான ஒரு கோடு உண்டு.



6. இதோ பார் வெள்ளைக் கிளியின் படம். அதன் இறகுகள் வெண்மை நிறமானவை; உடல் பெரிதாயிருக்கும்; அலகுகறுப்பு நிறம். கிளிகளில் இதற்குமட்டும் தலையில் ஒரு கொண்டை உண்டு.

7. கிளியின் அலகுகளில், மேல் அலகு வளைந்து உறுதியாயிருக்கும். கீழ் அலகு மேல் அலகைவிடக் குட்டையானது. இவ்வலகினால் அது உறுதியான கொட்டைகளையும் நொறுக்கித் தின்னும். பழங்களும் விதைகளும் அதற்கு முக்கிய உணவு.

8. காடுகளில் கிளிகள் கூட்டம் கூட்டமாய்ப் பறக்கும். ஆனால் மற்ற பறவைகளைப் போல அதிக உயரம் பறக்கமாட்டா. கிளிகள் கூடுகட்டி வசிப்பதில்லை. மரப் பொந்துகளில் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும்.

9. கிளியைப் பேசப் பழக்கலாம். கிளி சொன்னதைச் சொல்லும். அதைத் தவிர அதற்கு ஒன்றும் பேசத்தெரியாது; பேசுவதின் அர்த்தமும் அது அறியாது.

சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை.



## 4. வேப்ப மரம்.

1. வேப்பமரம்உஷ்ணதேசங்களில் அதிகமாய் வளரும். இது விதையிலிருந்து உற்பத்தியாகிறது. சில இடங்களில் விதைகள் விழுந்து தானாக முளைப்பது உண்டு. சிலர் விதைகளை நட்டுப் பயிர் செய்வதும் உண்டு. ஈரமுள்ள இடங்களில் இது செழிப்பாய் வளரும். சில வருஷங்களுக்குள் பெரிய மரமாகும்.

2. இதன் வேர்கள் பூமிக்குள் வெகு ஆழமாய்ச் செல்லும். அவை, மரம் விழுந்து விடாமல் உறுதியாய்ப் பிடித்துக்கொண் டிருக்கின்றன. மரத்துக்கு வேண்டிய உணவையும் தருகின்றன.

3. வேருக்கு மேல் வெளியில் தெரியும் பாகத்திற்கு அடிமரம் என்று பெயர். அடிமரத்தின் வெளிப்புறம் கனத்தபட்டைகளால் மூடப்பட்டு இருக்கிறது. பட்டையின் மேல் பக்கம் மிகவும்கரடுமுரடாகவும், கறுப்பாகவு மிருக்கும்.

4. அடிமரத்திற்குமேல் கிளைகள் பரவி வளர்ந்திருப்பதைப் பார், கிளைகளில் பசுமையான இலைகள் நிறைந்திருக்கின்றன. இலைகளின் ஓரம் சிறு ரம்பத்தின் பற்களைப்போல் இருக்கும். இவை குளிர்ந்த நிழலைக் கொடுக்கும்.

5. வெப்பங்காற்று, வியாதிகளை நீக்கும். தேகத்திற்குச் சுகத்தைத் தரக்கூடியது. ஆதலால் வேப்பிலையைக் குழந்தை பிறந்த வீடுகளிலும், வைசூரி வார்த்த வீடுகளிலும் வாசலில் கட்டி வைப்பார்கள் வேப்பங்கொழுந்து குழந்தைகளுக்கு மருந்தாக உதவும்.

6. இலைகளின் இடையே சிறுகிளைகளில் வெண்ணிறமான பூங் கொத்துகள் தொங்கிக் கொண்டு இருப்பதைப் பார். வேப்பம்பூ வாசனையுள்ளது.

7. பூ, முதிர்ந்தபின் காயாகும்; காய்பச்சை நிறமானது. காய்கள் முட்டை வடிவமாய் இருக்கும். காயைத்தின்றால் கசக்கும்; மேல் தோலை உரித்தால் வெண்ணிறமான பால்வரும். உள்ளே கொட்டை உண்டு. காய் முற்றிப் பழமான பின், பால் வற்றிப்போகும். பழம் மஞ்சள் நிறமானது; கொஞ்சம் இனிப்பாய் இருக்கும்.

8. பழங்களைப் பொறுக்கிக் கொட்டைகளை வேருக எடுப்பார்கள். கொட்டைக்கு வேப்ப முத்து என்று பெயர். வேப்பமுத்தில் இருந்து நெய் எடுப்பார்கள்.

9. வேப்பீ நெய் மருந்தாக உபயோகப்படுகிறது. வேப்பம் பிண்ணுக்கு மருந்தாகவும், வயலுக்கு உரமாகவும் உபயோகமாகும்.

10. வீடுகளுக்கு அருகில் வேப்பமரத்தை வைத்து வளர்ப்பது நல்லது.

## 5. கோழி.

1. வீதிகளில் கோழிகள் திரிவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இந்தப் படத்தில் கோழியும், சேவலும் நிற்கின்றன. அவைகளில் ஒன்று, உயரமாய் நிமிர்ந்து நிற்கிறது பார். அதன் தலையில் ஒரு கொண்டை இருக்கிறது. அதன் அலகின்கீழ் வட்டமான சதை வளர்ந்து தொங்குகிறது. இவை சிவப்பு நிறமானவை. அதன் வால் இறகு, நீண்டு வளைந்து அழகாயிருக்கிறது. அதுதான் ஆண் கோழி. ஆண் கோழிக்குச் சேவல் என்று பெயர். கோழியில் பலவகையுண்டு.

2. சேவலின் பக்கத்தில நிற்பது பெட்டைக்கோழி. பெட்டைக்கோழி சேவலைவிடக் குட்டையானது.

3, இவைகளின் கால்களும் அலகுகளும் உறுதியானவை. ஒவ்வொரு காலிலும் முன்புறம் மூன்று விரல்களும், பின்புறம் ஒரு விரலும் இருக்கின்றன.



4. சேவலுடைய காலின் பின்பக்கத்து விரலுக்கு மேல், ஒரு நகம் இருக்கிறது பார். இதற்கு முள் என்று பெயர். இது சேவலுக்குச் சரியான பருவம் வந்தபின் முளைக்கும். முள் அதிக உறுதியாயும், கூர்மையாயும் இருக்கும்.

5. இவற்றின் இறகுகள் குட்டையானவை. ஆகையால் இவை உயரமாய்ப் பறப்பதில்லை. இவைகளுக்குக் காதுகள் உண்டு. காதுகள் உரோமத்தால் மூடப்பட்டிருக்கின்றன.

6. இவை குப்பைகளை விரல்களால் கிளறி இரை பொறுக்கும். தவிடு, தானியம், பூச்சி, புழு முதலியவற்றை, இவை பிரியமாய்த் தின்னும். மென்று தின்னப் பற்கள் இல்லாததால் இவை இரையை அப்படியே விழுங்கிவிடும்.

7. பெட்டைக்கோழி ஒருதடவையில் 10 முதல் 20 முட்டைகள் வரை இடும். முட்டையிட்டு ஓய்ந்தபின் மூன்று வாரம் வரை அடை காக்கும். முட்டைகளின் மீது இருந்து, தன்சிறகுகளால் அவைகளை அணைத்து, சூடு கொடுப்பது தான் அடைகாத்தல். பிறகு முட்டையின் மீதுள்ள ஓடு உடைந்து குஞ்சு வெளிப்படும்.



8. முட்டையில் இருந்து குஞ்சு வெளி வருவதைப்பார். இதன் உடலில் இறகுகள் இல்லை. குஞ்சு வளர வளர இறகுகள் முளைக்கும். முட்டையிலிருந்து வெளி வந்த வுடன் குஞ்சு தானாக இரை பொறுக்கும்.

9. தாய்க்கோழி தன் குஞ்சுகளைப் பத்திரமாய்க் காக்கும். அதற்கு இரை கிடைக்கும் போது, கொக்கரித்துக் குஞ்சுகளைக் கூப்பிடும். குஞ்சுகளும் தாயின் சத்தத்தைக்கேட்டு நெருங்கி ஓடி இரைகளைப் பொறுக்கும். பருந்து, காகம் முதலிய சத்துருக்களாகிய பக்ஷிகளைக் கண்டால் தாய்க்கோழி வேறு விதமாய்ச் சத்தமிடும். அப்பொழுது குஞ்சுகள் ஓடிவந்து, தாயின் இறக்கைக்குள் மறைந்து கொள்ளும்.

10. இவை மாலை நேரத்தில் கூடுகளில் அடையும். சேவல் அதிகாலையில் கூவும்.

11. கோழியின் முட்டையையும், மாமிசத்தையும் சிலர் புசிப்பார்கள். இதற்காகவே இதை வீட்டில் வளர்க்கிறார்கள். சிலசமயங்களில் மருந்துக்காக முட்டைகளை உபயோகிப்பதும் உண்டு.



# 6. ஆடுகள்.

மக:—அப்பா! ஆட்டுமந்தையில்கூட்டமாய் நிற்கும் ஆடுகள் ஒரேமாதிரியாயில்லையே ஏன்?

தக:—குழந்தாய்! ஆடுகளில் வெள்ளாடு, செம்மறியாடு குறும்பையாடு, எனப் பலவகை உண்டு. இவைகளில் ஆண் ஆட்டுக்குக் கடா என்றும், பெண் ஆட்டுக்கு மறி என்றும் பெயர்.



இதோ பார் இது தான் வெள்ளாடு. இதன் உடம்பு முழுதும் கருமை நிறமான உரோமங்கள் அடர்ந்து இருக்கின்றன. இதன் கொம்புகள் நேராகவும் பின்புறம் சாய்ந்தும் இருக்கின்றன. இது உயரமாயுள்ளது.

ஆண் ஆட்டுக்குத் தாடையில் ரோமம் நீண்டு

தொங்கும். இதில் மற்ரெருருவகை உண்டு. அது குட்டையா யிருக்கும். அதற்குப் பள்ளையரடு என்று பெயர். இது கறுப்பு நிறமா யிருந்தும் வெள்ளாடு என்று பெயர் சொல்லுகிருர்கள்.



இது செம்மறியாடு. இதன் உரோமங்கள் மங்கின செந்நிற மானவை. வெள்ளாட்டை விட இதன் உரோமங்கள் அடர்த்தியாய் இருக்கும். இதன் கொம்புகள் திருகலாயும் வளைந்தும் இருக்கின்றன. இதில் பெண் ஆட்டுக்குப் பெரும்பாலும் கொம்புகள் வளர்வதில்லை.



இதோ பார்! குறும்பையாடு. இதன் மயிர்கள் வெண்மை நிறமானவை மற்ற ஆடுகளைவிட இதன் உரோமங்கள் அதிகநெருக்கமாய் நீண்டு வளர்ந்து தொங்குகின்றன. இதற்குக் கொம்புகள் இல்லை. செம்மறியாடும்,குறும்பையாடும் குட்டையானவை.

மக:-அப்பா! ஆட்டின் உரோமம் அடர்த்தியாயும், நீளமாயும் ஏன் வளர்ந்திருக்கிறது?

தக:—மகனே! குளிர்காலத்தில் அதற்குப் போர்வையாய் உதவ, அவ்வாறு வளர்ந்திருக்கிறது. கோடை காலத்தில் இந்த உரோமங்கள் உதிர்ந்துவிடும்.உதிர்ந்துவீணுகாதபடி ஆட்டை வளர்ப்பவர்கள் அவற்றைக் கோடைகாலத்தில் கத்தரித்து எடுத்துக் கொள்வார்கள். மறுபடியும் அவை குளிர் காலத்திற்குள் வளர்ந்து விடும்.

மக:-அப்பா! ஆடுகளுக்கு ஆகாரம் என்ன?

தக:—பிள்ளாய்! ஆடுகள் புல் பூண்டுகளைத் தின்னும். வெள்ளாட்டுக்கு இலை தழைகள் பிரியமான உணவு. ஆனால் ஆடுதின்னாப்பாளை என்ற இலைகளை மாத்திரம் ஆடுகள் தின்ன மாட்டா.

மக:-ஆம்,அப்பா! ஆடுகள்உணவுதின்னாத போது கூட வாயை அசைக்கிறதே! அது ஏன்?

தக:—ஆட்டின், மேல் வாயில் பற்கள் இல்லை. அவற்றிற்குப் பதிலாக சொறசொறப்பும் உறுதியுமான ஈறு வளர்ந்து இருக்கிறது. கீழ் வாயில் மட்டும் பற்கள் உண்டு. கீழ்வாய், மேலும் கீழும் அசைவதோடு பக்கத்துக்குப் பக்கமும் அசையும். ஆடு, புல்லை மேய்ந்துஇரைப்பையில் ஆகாரத்தைச் சேகரிக்கும். மறுபடியும் வாயினுள் இழுத்துக் கடை வாய்ப்பற்களால் மென்று விழுங்கும். இதற்குத்தான் அசைபோடுதல் என்று சொல்லுவது.

மக:—அப்பா! ஆட்டினால் நமக்கு என்ன உபயோகம்?

தக:—கண்மணி! ஆட்டின்பால்நமதுதேகத்துக்கு ஆரோக்கியமானது. அதன் உரோமத்தால் போர்வை, கம்பளம் நெய்வார்கள். அதன் தோல் பதனிடப்பட்டு, பலவித சாமான்களாகச் செய்யப்படுகிறது. ஆட்டின் மாமிசத்தைப் பலர் புசிக்கிறார்கள். ஆட்டுச் சாணம், மூத்திரம் இவை பயிர்களுக்கு நல்ல உரமாகும். இதற்காக ஆட்டு மந்தையை வயல்களில் நிறுத்திவைப்பது உண்டு. இதற்கு ஆட்டுக்கிடை என்று பெயர்.



# 7. தென்னைமரமும், பனைமரமும்.

1. இந்தப் படத்தில் தென்னைமரமும், பனைமரமும் இருக்கின்றன. இவை ஒரே இனத்தைச் சேர்ந்தவை; பெரும்பாலும் மணற்பாங்கான இடங்களில் நன்றாய் வளர்கின்றன.

2. இவை அதிக உயரமாய் வளரும். அடி பெருத்தும், நுனி சிறுத்தும் இருக்கும். இவைகளுக்கு மற்ற மரங்களைப்போல் கிளைகள் இல்லை.

3. ஆனால் இவற்றின் உச்சியில் மட்டைகள் அடர்ந்து இருக்கும். தென்னை மட்டைகள் முதிர்ந்த பின் உதிர்ந்துவிடும். பனைமட்டைகள் காய்ந்து தொங்கும். அவை தென்னை மட்டைகளைப்போல் அதிகமாக உதிர்வதில்லை. ஆகையால், அவைகளை வெட்டிவிடுவார்கள்.

4. தென்னை மட்டைகள் நீளமானவை. மட்டைகளின் இரு புறங்களிலும் ஓலைகள் தனித் தனியாய் நீண்டு வளர்ந்திருக்கும். தென்னை ஓலைகளைக் கீற்றுகளாக முடைந்து வீட்டின் கூரையாக் வேயவும், பந்தல் போடவும் உபயோகிக்கிறார்கள். விசிறியும் செய்வதுஉண்டு.

5. பனைமட்டைகள் குட்டையானவை.மட்டைகளின் இருபுறங்களிலும் கூரான கருக்குகள் உண்டு. ஓலைகள் ஒன்றோடு ஒன்று சேர்ந்து இருக்கும். பனை ஓலைகளை வீடு வேயவும், விசிறிகள் செய்யவும், கணக்குகள் எழுதவும் உபயோகிக்கிறார்கள். பனைநாரினாலும் ஓலைகளினாலும் பெட்டிகளும், பாய்களும் பின்னுகிறார்கள்.

6. மட்டைகளின் இடையே பாளைகள் உண்டாகும். பாளையைப் பக்குவப்படுத்தி, நுனியைச் சீவினால் கள் வடியும். பாளையில் தொங்க விட்டிருக்கும் கலயத்தில் கள்ளை இறக்குவார்கள்.

7, சிலர் கலயங்களின் உள்ளே சுண்ணாம்பைத் தடவிக் கட்டுவார்கள். அதில் விழும் துளிகள் பதனியாகும். இது குடிக்க இனிப்பாயிருக்கும். பதனியைக் காய்ச்சி வெல்லமும், கற்கண்டும் செய்வார்கள்.

8. பாளையிலிருந்து பூ வெளியாகும். பூக்களிலிருந்து காய்கள் குலைகுலையாய்க் காய்க்கும்.

9. தென்னை மரத்தின் இளங்காய்க்கு இளநீர் என்று பெயர். இதில் நிறைய ஜலம் உண்டு;இது குடிப்பதற்கு இனிப்பாய் இருக்கும்.

முற்றின காய்க்குத் தேங்காய் என்று பெயர். இதன் உள்ளே காணப்படும் பருப்பு, வெள்ளை நிறமானது. இது தின்னவும், சமைக்கவும், எண்ணெய் எடுக்கவும் உபயோகமானது.

10. பனங்காய் கறுப்பு நிறமாய் இருக்கும். காயை வெட்டி நொங்கு எடுப்பார்கள். இது சாப்பிட மிகவும் ருசியாய் இருக்கும். பனங்காய் முற்றினால் பழமாகும். பனம்பழம் சாப்பிட இனிப்பா யிருக்கும்.

11. இவைகளின் உபயோகம் இன்னும் பல உள்ளன. தென்னைமரம் ஐந்தாறு வருடங்களில் பலன் தரும். பனைமரம் பலன்தரப் பல வருடங்கள் செல்லும்.

## 8. இந்திய நாணயங்கள்.



1. இது ஒரு பை. இதைச் சல்லி, தம்பிடி, காசு, கால் துட்டு என்று வழங்குவதும் உண்டு.



2. இது வட்ட வடிவமானது. செம்பினால் செய்யப்பட்டது. இதன் ஒரு பக்கத்தில், நமது அரசரின் உருவமும், மற்றொரு பக்கத்தில் கொடிபோன்ற சித்திரமும், இதன் மதிப்பும் போடப்பட்டிருக்கின்றன.

3. இதுபோன்ற மூன்று பைசாக்கள் சேர்ந்தது காலணா.




இதுதான் காலணாவின் உருவம். இதுவும் செம்பினால் செய்யப் பட்டு வட்டவடிவமாய் உள்ளது.

4. பன்னிரண்டு பைசாக்கள் அல்லது நான்கு காலணாக்கள் சேர்ந்தது ஒரு அணா.



இதோ பார்! இது அணாவின் படம்; நிக்கல் என்ற கலவை உலோகத்தால் செய்யப்பட்டது. இதன் விளிம்பு பல வளைவுகள் உள்ளது. இதை வீசம், அல்லது மாகாணி ரூபாய் என்றும் சொலவது உண்டு.

5. இது, இரண்டணாவின் உருவம், இதுவும் நிக்கல்உலோ கத்தால் செய்யப்பட்டது சதுர வடிவமானது. இதற்கு அரைக் கால் ரூபாய் என்றும் பெயர் உண்டு.




6. இதுவும் இரண்டணா தான். இது வெள்ளியினால் செய்யப்பட்டது. வட்டவடி வமானது.





7. இதோ பார்! நாலணாவின் படம். இது, நிக்கலால் செய்யப்பட்டது. இதற்குக் கால் ரூபாய் என்றும் பெயர்.







8. இது, வெள்ளியினால் செய்யப்பட்ட நாலணா, அல்லது கால் ரூபாய்.

9. இது, நிக்கலால் செய்யப்பட்ட எட்டணாவின் படம். இதற்கு அரை ரூபாய் என்றும் பெயர்.







10. இது, வெள்ளியினால் செய்யப்பட்ட எட்டணா. அல்லது அரை ரூபாயாகும்.




11. இதோ காண்பது ஒரு ரூபாயின் படம் இது வெள்ளியினாலேயே செய்யப்பட்டது.



12. தங்க நாணயம் ஒன்று உண்டு. அதற்குப்பவுன் அல்லது ஸாவரன் என்று பெயர். அது பதினைந்து ரூபாய் மதிப்புள்ளது. இவை நமது தேசத்தில் வழங்கி வரும் நாணயங்கள். இவற்றிற்கு இந்திய நாணயங்கள் என்றுபெயர்.



## 9. வாத்து.

1. வாத்து, பறவை இனத்தைச்சேர்ந்தது. இதில் குள்ளவாத்து, பெரியவாத்து, காட்டு வாத்து எனப் பலவகை உண்டு. இவை, நீரில் வாழும் ஜெந்துக்கள்.

2. குள்ளவாத்தும், பெரியவாத்தும், தரையிலும் நடமாடும். காட்டுவாத்து, உயரப் பறக்கும், தரையில் உலாவித் திரியாது.

3. வாத்தின் அலகுகள், அகன்று நீண்டு தட்டையாயும், சப்பட்டையாயு மிருக்கும். அத

ஞல் அது புழு பூச்சி முதலியவைகளைப் பிடித்துத் தின்னும்.

4. வாத்து, புழுக்களைப் பிடிப்பதற்குத் தன் தலையை மட்டும் ஜலத்திற்குள் அமுக்கி, அலகினுல் சேற்றைக் கிளறும். அதில் புழுவோடுள்ள சேற்றை உறிஞ்சி வாயினுள் இழுக்கும்,

5. அலகுகளின் இருபக்கங்களிலும், சீப்பின் பற்கள் போன்ற மெலிய சிறு முட்கள் இருக்கின்றன. இரு அலகுகளும் சேரும்போது அவைகளின் இடையே சிறு துவாரங்கள் காணப்படும்.

6. வாயினுள் இழுத்த சேற்றைப் பிழியும். அப்பொழுது அத்துவாரங்களின் வழியாய் நீரும், சேரும் கீழே வழிந்துவிடும். வாயினுள் அகப்பட்ட புழு, பூச்சி, சிறு மீன் முதலியவற்றைப் புசித்துவிடும்.

7, வாத்தின் உடல் பெரியது. கால்கள் குட்டையானவை. ஆகையால் அது, பூமியில் வேகமாய் நடக்காது. தள்ளாடித் தள்ளாடி நடக்கும்.

8., பாதங்களில் உள்ள விரல்களை ஒரு வகைத் தோல் இணைத்துக்கொண் டிருக்கும். உடல் நடுவில் பெருத்தும், நுனியில் சிறுத்தும் உள்ளது. இவற்ருல் தண்ணீரில் வெகு சுலபமாக நீந்தும். நீந்தும்போது தண்ணீரைத் தள்ளுதற்காகத் தோலினுல் இணைக்கப்பட்ட பாதங்கள் துடுப்புப்போல் உதவுகின்றன.

9. வாத்தின் இறகுகளில் ஒருவகை நெய்ப் பசை உண்டு. ஆகையால் அது, தண்ணீரில் நீந்தினாலும், அதன் இறகுகள் நனையமாட்டா.

10. காட்டுவாத்துக்கள், ஏறிகளிலும், குளங்களிலும் கூட்டம் கூட்டமாய் வசிக்கும். நீர் வற்றிய காலங்களில், நீருள்ள வேறு இடங்களுக்குப் பறந்து போகும். இவை நாணல்களிலும், புதர்களிலும் முட்டையிட்டுக் குஞ்சு பொறிக்கும்,

11. வாத்துக்களை வீட்டில் வளர்ப்பவர்கள், அதன் முட்டைகளைக் கோழிகள் அடைகாத்துக் குஞ்சுகள் பொரிக்கும்படி செய்வார்கள்.

12. வாத்துக்களின் மாமிசத்தையும், முட்டையையும் சிலர் புசிக்கிறார்கள்.

## 10. காகிதம்.

1. பிள்ளைகளே! நீங்கள் படிக்கும் இப் புத்தகம், காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது என்பதை அறிவீர்கள. காகிதத்தை எப்படிச் செய்கிறார்கள் என்பது தெரியுமா? சொல்லுகிறேன், கவனியுங்கள்.

2. கந்தைத்துணிகள், வைக்கோல், சில மரப்பட்டைகள், சில சருகுகள், கூந்தற்பனை ஓலைகள், ஒருவித வாழை, மூங்கில் முதலியவைகளால் காகிதம் செய்யப்படுகிறது.

3. இவைகளைத் தண்ணீரில் ஊறவைத்து அழுக்கை நீக்கி, ஒரு பெட்டியில் போடுவார்கள். அப்பெட்டியில் அனேக கத்திகள் உள்ள ஓர் உருளை உண்டு. அவ்வுருளையைச் சுற்றினால் இவை நைந்து கூழாய்த் திரளும்.

4. அந்தக் கூழிலுள்ள நீரை வடித்து விடுவார்கள். அதன் பின் சுத்த ஜலத்தில் ஒரு விதச் சுண்ணும்பைக் கலந்து, அக்கூழுடன் சேர்ப்பார்கள். இவ்விதம் கலக்கப்பட்ட கூழ் அதிக வெண்மையாயும், பால்போலுமுள்ள குழம்பாகும். அப்பொழுது வேண்டுமானால் வருணங்களையும் கலப்பார்கள்.

5. பிறகு அக்குழம்பை ஒரு பாத்திரத்தில் ஊற்றி, அடுப்பில் வைத்துக் கட்டியாகாமல் பக்குவமாய்க் காய்ச்சுவார்கள்.

6. பக்குவமானபின் ஒரு வித அச்சில் ஊற்றிச் சற்று உலரவைப்பார்கள். அவ்வாறு உலர்ந்த வஸ்துவை, உடனே மெல்லிய கம்பளத்தின்மீது பரப்பி, அதன்மீது மற்றொரு கம்பளத்தால் மூடுவார்கள்.

7. இவ்விதமான பல அடுக்குகளை ஒரு இயந்திரத்தில் வைத்து அழுத்துவார்கள். இதனால் அவற்றிலுள்ள ஜலம் நீங்கிக் காகிதமாகும். பின்பு இக்காகிதங்களை உலர்த்தி, அளவாக அறுத்து விற்பனைக்குக் கொண்டு வருகிறார்கள்.



# 11. குரங்கு.

1. மேலே உள்ள குரங்கின் படத்தைப் பார். குரங்கின் உருவத்தைக் கவனி. ஏறக்குறைய மனிதனைப்போல் இருக்கிறதல்லவா? குரங்கு மனிதரைப்போல் பேசாது. மனிதனுக்கு இல்லாத அவயவம் குரங்குகளுக்கு ஒன்று உண்டு. அது என்ன; உனக்குத் தெரியுமா? அது தான் வால்.

2. சில குரங்குகளுக்கு வால் நீளமாயும், சில குரங்குகளுக்கு வால் குட்டையாயுமிருக்கும். சிலவற்றிற்கு வால் கிடையாது.

3. குரங்கின் உடம்பில் உரோமம் அடர்ந்திருக்கும். அதற்கு இரண்டு கைகளும், இரண்டு கால்களும் உள்ளன. கைகள், கால்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து விரல்கள் உண்டு. அவை மிருது

வானவை, அவற்ருல் மரங்களின்மீது நன்ருய் ஏறி இறங்கும். மரத்துக்கு மரம் தாவும். மரக் கிளைகளைப் பிடித்துத் தொங்கும்.

4. குரங்கு, காய் கனி தின்பண்டங்கள் முதலியவற்றைத் தின்னும். அதன் வாயில் இரு பக்கங்களிலும் பைகள் உண்டு. அது தனக்குக் கிடைத்த பண்டங்களை வாயில் போட்டுப் பைக ளில் நிரப்பிக்கொள்ளும். பின் கொஞ்சங் கொஞ் சமாய் வாய்க்குள் தள்ளித் தின்னும். வாலில் லாக் குரங்குகளுக்கு வாயில் பைகிடையாது.

5. குரங்கு, தன் குட்டிகளுக்குப் பால் கொடுத்து, அதிக அன்புடன் வளர்க்கும். அவை தாயின் அடிவயிற்றை உறுதியாய்ப் பிடித்துக் கட்டிக்கொண்டிருக்கும். தாய்க்குரங்கு மரங்களில் தாவும்போதும், குட்டி தான் பிடித்த பிடியை விடாது.

6. குரங்கு, அதிக அறிவுள்ள பிராணி. நாம் ஏதாவது செய்வதைப் பார்த்தால், தானும் அப்படியே செய்யும். நாம் கற்பிப்பதை வெகு சீக்கிரத்தில் கற்றுக்கொள்ளும். இதனுலேயே குரங்காட்டிகள் இதைப் பிடித்துப் பல விளை யாட்டுக்களில் பழக்கி, வேடிக்கை செய்யக் கொண்டு வருகிருர்கள்.

7. குரங்கின் அருகே போகாமலும், அதற் குத்தொந்தரவு செய்யாமலும் இருந்தால், அது மனிதருக்குத் தீங்கு ஒன்றும் செய்யாது. பழகின குரங்கு நம்மைக் கடிக்காமல் சாதுவாயிருக்கும். தன்னை வளர்ப்பவரிடத்தில் பிரியமாயிருக்கும்.



## 12. எருமை.

1. எருமை, எருதைவிடக் குட்டையானது. அதன் நிறம் கறுப்பு. உடல் பருமனயிருக்கும். எருமையின் கால்கள் குட்டையும், உறுதியுமானவை. அதன் கொம்புகள் வளைந்து, பின்புறம் நீண்டு இருக்கும்.

2. எருமை மிகவும் மந்தமாய் நடக்கும். நடக்கும்போது தலையைத் தாழ்த்திக்கொண்டே போகும். வழியில் ஒதுங்கிப் போகாது. அதற்குச் சுறுசுறுப்பு இல்லை.

3. எருமைக்குத் தண்ணீரிலும், சகதியிலும் படுத்திருக்கப் பிரியம் அதிகம். தண்ணீரிலிருக்கும்போது அது தலையை மேலே உயர்த்திக்கொண்டு வெகு நேரம் அங்கு தங்கியிருக்கும்.

4. எருமையை வைத்திருப்பவர்கள் அதை அடிக்கடி குளிப்பாட்டுவார்கள். அவ்வாறு செய்யாவிட்டால் அதற்கு வியாதி உண்டாகும்.

5. எருமை, வைக்கோலையும், புல்லையும் தின்னும். இதற்குப் பருத்திக்கொட்டை, தவிடு, பிண்ணாக்கு முதலியவற்றையும் வைப்பதுண்டு. இது கழு நீரை அதிக ஆவலுடன் குடிக்கும்.

6. எருமை பசுவைவிடப் பால் அதிகம் தரும். பால் புத்தியை மந்தப்படுத்தும். தடிப்பாயிருக்கும். எருமைப்பால் ருசியிலும், குணத்திலும் பசுவின் பாலுக்கு ஈடாகாது. ஆனால் இதில் வெண்ணெய் அதிகமாய்க் கிடைக்கும்

7. சில இடங்களில் எருமைகளை ஏரில் பூட்டி உழுகிறார்கள். எருமைக் கடாக்கள் பாரமான வண்டி இழுக்கவும் உதவுகின்றன. எருமை எருதைப்போல் விரைவாய்ச் செல்லாது.

8. எருமையின் தோல், பதனிடப்பட்டு, பல வேலைகளுக்கு உபயோகப்படுகிறது. இதன் கொம்பினால், சீப்பு, சிமிள், கத்திப்பிடி முதலியன செய்கிறார்கள்.

## 13. ஆமை.

1. ஆமை குறுகியுள்ள ஓர் பிராணி. சிறிது நீண்டு வட்டமாயிருக்கும். அதன் முதுகில் ஓர் அழுத்தமான ஓடு உண்டு. அடிப்புறத்தில் தோல் வெளுப்பாயிருக்கும். ஆமைகளில் பலவகையுண்டு. அவை பெரும்பாலும் நீரில்வாழும். சில ஆமைகள் நிலத்திலும் வசிக்கும்.

2. ஆமை, தன் தலை, கால்கள், வால் முதலியவற்றை வேண்டும்போது நீட்டிச் சுருக்கிக்கொள்ளும். தனக்கு ஆபத்து உண்டாகும் போது, தன் உறுப்புக்களை உள்ளே இழுத்துக் கொள்ளும்; அப்பொழுது அது பார்வைக்கு ஒரு கல்லைப்போல் தோன்றும்.



3. ஆமையை மல்லாத்திவிட்டால், அதனால் திரும்பிக்கொள்ள முடியாது. இது மணலில் முட்டையிட்டு மூடிவிடும். சூரிய வெப்பத்தால் முட்டையிலிருந்து குஞ்சு வெளிவரும். ஆமை வெகு காலம் உயிரோடிருக்கும். சில ஆமைகள் இருநூறு வருடம் உயிருடன் வாழ்வதாகச் சொல்லப்படுகின்றன.

4. ஆமைகளில் பெரியது கடலாமை. இதற்குவிரல்கள் கிடையாது. இதன்கால் நீந்தக் கூடியதாக மீன் சிறகைப்போல் இருக்கும்.

5. நில ஆமையின் கால்களில் கூரான நகங்கள் உண்டு. இதனுல் கிழங்குகளையும், செடியின் வேர்களையும் தோண்டும். இது கிழங்கு, பூச்சி, புழுக்களைத் தின்று பிழைக்கும்.

6. நீர் ஆமை, கிணறுகளிலும், குளங்களிலும் வசிக்கும். இதன் கால் விரல்கள் ஜவ்வால் இணைக்கப்பட்டுள்ளன. இதனுல் இலகுவாய் நீந்தும் இது மீன், பூச்சி, புழு முதலியவைகளைப் பிடித்துத் தின்னும். கிணறுகளில் பூச்சி புழுக்கள் இல்லாமல் தண்ணீர் சுத்தமாயிருப்பதற்கு இதைக்கிணற்றில் போட்டு வளர்ப்பார்கள்.

7. கடலாமைகளில் சில பன்னிரண்டு அடி நீளமும் உண்டு. ஆமையோட்டால் பலவித சாமான்கள் செய்கிருர்கள். ஆமை ஓடு ஔஷதத்திற்கு உதவும்.

## 14. மீன்.

முத்து:-மணி! இந்தக்குளத்தில் தண்ணீர் எவ்வளவு தெளிவாய் இருக்கிறது; தண்ணீரில் மீன்கள் கூட்டம் கூட்டமாய் நீந்தித் திரியும் அழகைப்பார்.

மணி:-ஆம், ஆம், பார்த்தேன். அதோ ஒரு மனிதன் தண்ணீரில் நிற்கிருனே! அவன் என்ன செய்துகொண்டிருக்கிருன்.

முத்து:-அவன் தான் செம்படவன். அவன் வலையை வீசித் தண்ணீரில் உள்ள மீன்களைப் பிடிக்கிருன். பிடித்த மீன்களைக் கரையில் உள்ள கூடையில் போடுகிருன். பார்க்கலாம் வா.

மணி:-கூடையிலிருக்கும் மீன்களில், சில துள்ளிக்கொண்டும், சில இறந்தும் கிடக்கின்றனவே, ஏன்?

முத்து:-இதன் காரணம் உனக்குத் தெரியாதோ? விவரமாய்ச் சொல்லுகிறேன் கேள்.



மீன்கள் நீரில் வாழும் ஜெந்துக்கள். அவை நீருடன் கலந்துள்ள காற்றைமட்டுமே உட்கொள்ளும், வெளியில் பரவியுள்ளகாற்றை உட்கொள்ள முடியாமல் இறந்து விடுகின்றன.

மணி:-அப்படியானல், மீன் நீரில் உள்ள காற்றை எவ்வாறு உட்கொள்ளும்?

முத்து:-மீன், தண்ணீரில் திரியும் போது, அடிக்கடி வாயைத் திறந்து மூடும். அப்பொழுது வாயினுள்ளே தண்ணீர்செல்லும்; ஆனல்

அது தண்ணீரைக் குடிப்பதில்லை. மீனின் கழுத்தின் இரண்டு பக்கங்களிலும், சிறிது நீண்ட இரு பிளவுகள் இருக்கின்றன. அவைகளினுள் சீப்பின் பற்களைப் போன்ற சிவந்த மடிப்புகள் உள்ளன. இவைகளுக்குச் செவுள்கள் என்று பெயர். செவுள்களின் மூலமாய் நீரில் உள்ள நல்ல காற்றை உட்கொண்டு, பிளவுகளின் வழியாய்த் தண்ணீரை வெளியில் தள்ளிவிடும்.

கொதிக்கவைத்து ஆறின நீரில், மீனைப் பிடித்துப் போட்டால் சுவாசிப்பதற்குக் காற்று இல்லாமையால் உடனே இறந்துவிடும். மீனின் கண்களில் இமைகள் கிடையா. கண்கள் எப்போதும் திறந்ததாகவே இருக்கும்.

மீனின் தேகத்தின் மீது, ஒருவித தைலம் உண்டு. அதன் உடலை, தலைப்புறமிருந்து வால் புறமாகத் தடவினால் வழவழப்பாய் இருக்கும். அதனால் அது தண்ணீரில் நழுவிக்கொண்டு போக ஏதுவாய் இருக்கிறது.

நமக்குக் கைகால் உதவுவது போல, அதற்குப் பல சிறகுகள் உதவியாய் இருக்கின்றன. இவை மூடவும், விரிக்கவும் கூடியவை. அதன் முதுகில் முன்னும் பின்னுமாக இரண்டு சிறகுகள் உள்ளன. மீன்கள் நீந்தும்போது பக்கங்களில் சாய்ந்துவிடாமல் இவை உபயோகப்படும்.

வாலின் நுனியில் சிறகு அகன்று இருக்கிறது. மீன் நீந்தும்போது இஷ்டப்படி திரும்புவதற்கு இது அநுகூலமாயிருக்கிறது.

செவுளுக்கு அருகில் பக்கத்திற்கு ஒன்றாக இரண்டு சிறகுகள் இருக்கின்றன. இவற்றால் தண்ணீரைத் தள்ளிக்கொண்டு நீந்தும். அடிப் புறத்தில் உள்ள சிறகுகள், உடலைச் சாயவிடா மலும், மீன் மேலே கிளம்பவும் உதவுகின்றன.

மீன் நீரிலுள்ள பூச்சி புழுக்களையும், சிறு மீன்களையும் பிடித்துத்தின்னும். இதனால் சிறிய மீன் பெரிய மீனுக்கு இரை என்று சொல்லு கிறார்கள்.

மீன் ஒவ்வொரு தடவைக்கும் ஆயிரக்கணக் கான முட்டைகள் இடும். இவை சூரிய வெப்பத் தால் பொரிந்து குஞ்சுகள் வெளிப்படுகின்றன. குஞ்சுகள் வெளிப்பட்ட உடனே நீந்தும். இத னாலே மீன் குஞ்சுக்கு நீந்தப்பழக்க வேண்டிய தில்லை என்ற பழமொழி உண்டு.

## 15. தேகப்பயிற்சி.

தாதா:—இராமு! பள்ளிக்கூடத்திலிருந்து இப்போதுதான் வருகிறாயோ!

பேரன்:—ஆம், ஆம், இப்போதுதான் வரு கிறேன்.

தா:—இன்று பள்ளிக்கூடத்தில் என் னென்ன படித்தாய்?

பே:—இன்றைக்கா! வாசகபாடம் படித் தேன், கணக்குகள் செய்தேன், சித்திரம் வரைந் தேன், தேகப்பயிற்சியும் செய்துவந்தேன்.

தா:—சந்தோஷம்! இவையெல்லாம் சரி வரச் செய்தாயா?

பே:—ஆம் சரிவரச்செய்தேன். தாதா! என்னைப் பள்ளிக்கூடத்திற்குப் படிக்கத்தானே அனுப்பினீர்கள். உபாத்தியாயர் தேகப்பயிற்சியும், விளையாட்டும் நடத்துகிறாரே, அது எதற்கு?



தா:—இராமு! நீ தேகப்பயிற்சி செய்வதால் உன் அவயவங்கள் உழைக்கிறதல்லவா? அப்பொழுது உன் தேகத்திலிருந்து வியர்வை நீர் வெளிவரும். அதன் மூலமாய், தேகத்திலுள்ள அசுத்தங்கள் நீங்கி விடுகின்றன. இதனால் உனக்கு வியாதி அணுகாமல் சுறுசுறுப்பும் சுகமும் பலமும் உண்டாகும். ஞாபகசக்தியும், படிப்பும் விருத்தியாகும். விளையாட்டாலும் அது எவ்வளவு நன்மை தருகிறது பார்த்தாயா!

பே:—தாதா! நான் பள்ளிக்கூடத்திலிருந்து வந்தவுடன், வீதியில் பிள்ளைகளுடன் கோலி, பந்து முதலியன விளையாடுகிறேன்; இவை போதாதா? பள்ளிக்கூடத்திலும் விளையாட வேண்டுமா?

தா:—நீ தெருவில் விளையாடுவதால் துஷ்டர்களோடு விளையாட நேரிடும். அவர்கள் பேசும் கெட்ட வார்த்தைகளும், பழகும் தீய பழக்கங்களும் உனக்கு உண்டாகும். இதனால் உன்னுடைய நடக்கையும், படிப்பும் கெடும்.

வீதியில் வண்டிகளும், மாடுகளும், குதிரைகளும் ஓடிவரும். அதனால் ஒருக்கால் அபாயம் நேரிடும். தெருவில் புழுதி பறக்கும். குப்பைகளிலிருந்து அசுத்தமான காற்று வீசும். ஆகையினால் உன் தேகத்திலும், வஸ்திரத்திலும் அழுக்கடையும்; சொறிசிரங்கு; காய்ச்சல் முதலிய பல நோய்களும் உண்டாகும்.

பள்ளிக்கூடத்தில் நடத்தப்படும் விளையாட்டுகளுக்கு இவ்விதக்குறைகள் ஒன்றும் இல்லை. அவை தேகத்தைப் பலப்படுத்தி, ஞாபக சக்தியை விருத்தி செய்யும்.

ஆதலால் பாடசாலையில் நடத்தப்படும் தேகாப்பியாசத்தைத் தினந்தோறும் தவறாமல் செய்து வரவேண்டும்.



## 16. கிராம அதிகாரிகள்.

வேலன் என்ற சிறுவன் மேலூரில் ஒரு பாடசாலையில் படித்துவந்தான். பக்கத்துக் கிராமத்தில் அவனுடைய மாமன் வீடு இருந்தது. விடுமுறை நாளில் மாமன் வீட்டுக்குப் போயிருந்தான். அங்கே அன்று அந்த ஊர்ச்சாவடியில் பலர் கூடியிருந்தார்கள். அதைப்பார்த்து:—

**வேலன்:**—மாமா! இன்று இங்கே கூட்டம் கூடி இருக்கிறார்களே! என்ன விசேடம்?

**மாமன்:**— வேலா! இவ்வூர்த் தலையாரி ஊரைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்தான். வரும்போது மேலத்தெருவில் சுந்தரம்பிள்ளை வீட்டில் கொல்லைப்புறத்தில் ஒரு குறவன் கோழி திருடுவதைக் கண்டான். உடனே தலையாரி கோழியுடன் அந்தக் குறவனைப் பிடித்துக் கொண்டு வந்து கிராமமுனிசீபிடம் ஒப்புவித்தான்.

கிராமமுனிசீபு அதைப்பற்றி இப்போது விசாரித்துக் கொண்டு இருக்கிருர். ஜனங்கள் வேடிக்கை பார்க்கிருர்கள்.

வே:—மாமா! கிராமமுனிசீபு என்பவர் யார்? அவருடைய வேலே என்ன?

மா:—கிராமமுனிசீபு என்பவர் கிராமத்தின் தலேவர். நாம் நிலங்களுக்காகக் கொடுக்க வேண்டிய தீர்வையை வசூலித்துக் கஜாளுவில் செலுத்துபவர்.

கடன் வாங்கினவர் கொடாமலிருந்து, கொடுத்தவர் பிரியாது செய்தால் 20 ரூபாய்க்கு உட்பட்ட வழக்குகளேயும் விசாரித்துத் தீர்ப்புச் செய்வார்.

சிறு அடிபிடி சண்டைகளேயும், ஒரு ரூபாய்க்கு உட்பட்ட களவுகளேயும் விசாரித்துத் தண்டிப்பார். கிராமத்தைச் சேர்ந்த வேலேகள் இன்னும் அவருக்கு அநேகம் உண்டு.

வே:—கிராமத்தில் இவரைத்தவிர வேறு அதிகாரிகள் உண்டா ?

மா:—ஆம், கணக்கப்பிள்ளே ஒருவர் இருக்கிருர். கிராமமுனிசீபும், கணக்கப்பிள்ளேயும் கிராம அதிகாரிகள். இவர்கள் இட்ட வேலேயைச் செய்வதற்குத் தலேயாரி, தோட்டி, தண்டற்காரன் ஆகிய மூன்று வேலேக்காரர்கள் உண்டு.

கணக்கப்பிள்ளே, நாம் பயிரிடும் நிலத்தை அளப்பார். அதன் விஸ்தீரணத்தையும், நாம் இட்ட பயிரின் வகையையும் கணக்கில் பதிவு செய்வார். ஏற்படும் தீர்வையைக் குறிப்பார்.

**தலையாரி**, ஊரைக்காவல் காப்பான். கணக்கப் பிள்ளை நிலங்களை அளக்கும்போது, சங்கிலி பிடித்து இழுத்து உதவி செய்வான்,

கிராமமுனிசீபு தீர்வை வசூல்செய்யும்போது **தண்டற்காரன்** கூட இருந்து உதவுவான். வசூலான பணத்தைக் கஜானுவுக்குக் கிராம முனிசீபுடன் கொண்டு போவான்.

**தோட்டி**, கிராமத்தாருக்குச் சர்க்கார் விளம்பரங்களைத் தமுக்கடித்துத் தெரிவிப்பான். மேலான அதிகாரிகளுக்குச் சேரவேண்டிய கடிதங்களைக் கொண்டு போவான்.



# 17. போலீஸ்காரன்.

1. இந்தப் படத்தில் காண்பவன் ஒரு போலீஸ்காரன். ஊரைக்காப்பதற்குத் துரைத்தனத்தாரால் நியமிக்கப்பட்டவன்.

2. இவனுடைய தலைப்பாகை சிவப்பாக வும், கால்சட்டையும், மேல்சட்டையும் வெண் மையாகவும் இருக்கும். இடுப்பில் தோல் பட்டை ஒன்று கட்டி இருக்கின்றான். அத்தோல்பட்டை யில் குறுந்தடி ஒன்று மாட்டி இருக்கிறான். அவ னிடத்தில் குறிப்புப் புத்தகம் ஒன்றும், ஊது குழல் ஒன்றும் இருக்கின்றன. போலீஸ்கார னுக்கு அவசியமான சமயத்தில் கத்தியும் துப்பாக்கியும் கொடுப்பார்கள்.

3. போலீஸ்காரர்கள், ஜனக்கூட்டமுள்ள முக்கியமான வீதிகளிலும், ஜனக்கூட்டமுள்ள இடங்களிலும் நிற்பார்கள். ஊரில் களவு, கல கம், கொலை முதலியன நடவாதபடி பார்த்துக் கொள்வார்கள்.

4. வீதியில் சண்டையிடுவோர், குடித்து விட்டுக் கலகம் செய்வோர், சூதாடுவோர், திரு டர், கொலையாளி, பாதைகளில் மலஜலம் கழிப் பவர் இவர்களைப் பிடித்துப் போலீஸ் ஸ்டேஷ னில் அடைத்து வைத்துப் பிறகு மாஜிஸ்தி ரேட் இடம் ஒப்புவிப்பார்கள்.

5. வழிதப்பி வரும் குழந்தைகளைக் காப் பாற்றிச் சொந்தக்காரர்களிடம்ஒப்புவிப்பார்கள்.

6. பட்டணங்களிலும், முக்கிய கிராமங் களிலும் போலீஸ் பாராக்கள் உண்டு. இதில் 10 போலீஸ்காரர்களுக்குக் குறையாமல் இருப் பார்கள். இவர்களுக்குத் தலைவராக ஸப் இன்ஸ் பெக்டர் அல்லது ஹெட்கானிஸ்டேபிள் ஒரு வர் இருப்பார்.

7. குற்றவாளியைப்பிடித்து அவனுடைய பெயர், ஊர், குற்றம் முதலியவைகளைக் குறிப்புப் புத்தகத்தில் பதிந்து கொண்டு, மேல் அதிகாரிகளுக்கும் தெரிவிப்பார்கள்.

8. பெரும் கலகம் நடக்கும் இடங்களில் இருக்கும் போலீஸ்காரர் தங்கள் உதவிக்காக, மற்ற போலீஸ்காரரை ஊது குழலால் ஊதி, வரவழைத்துக் கொள்ளுவார்கள்.

9. உயிர்ச்சேதம் ஏற்படும் அபாய காலத்தில் துப்பாக்கியை அவர்கள் உபயோகிப்பார்கள்.

## 18. உலோகங்கள்.



1. படத்தில் காட்டிய இவன் ஒரு கொல்லன். இரும்புவேலை செய்பவன். இவன் அருகே உலை எரிந்து கொண்டிருக்கிறது. பக்கத்தில் துருத்தி ஊதுவதால் நெருப்பு நன்றாய் எரிகிறது. கொல்லன் உலையில் இரும்பை வைத்துச் சிவக்கக் காய்ச்சுகிறான்.

2. காய்ந்த இரும்பைச் சம்மட்டியால் அடித்து, மண்வெட்டி, அரிவாள், கோடாலி கடப்பாரை முதலியன செய்கிறான்.

3. இரும்பு வெள்ளை நிறமானது. ஆயினும் வெள்ளியைப்போல் வெண்மை யானதல்ல. இரும்பில் துருப்பிடித்தால் கறுப்பு நிறமாய்க் காணப்படும்.

4. இரும்பு மிகவும் உறுதியான உலோகம். இது அதிகமாய் அகப்படக்கூடியது. இதனுல் இயந்திரங்களும், கருவிகளும் செய்யப்படுகின்றன. இரும்பு நமக்கு மிகவும் உபயோகம் உள்ளது.

5. இந்தப் படத்தில் தட்டான் நகைகள் செய்து கொண்டிருக்கிருன்.



6. தட்டான் தங்கத்தாலும், வெள்ளியாலும் காப்பு, கொலுசு, சங்கிலி, மோதிரம் முதலிய பலவித நகைகள் செய்வான்.

7. தங்கம் மஞ்சள் நிறமுடையது. இது உறுதியும், கனமும், பிரகாசமும் உள்ளது இதில் களிம்பு ஏருது. இது குறைந்த அளவாய்க் கிடைப்பதால் இதன் விலை அதிகம். இதுவே உலோகங்கள் எல்லாவற்றிலும் சிறந்தது.

8. உலோகங்களில் தங்கத்துக்கு அடுத்தது வெள்ளி. இது வெண்மை நிறமானது. பிரகாசமும் உள்ளது. இதிலும் களிம்பு ஏருது.



9. இதோ வேலை செய்து கொண்டிருப்பவன் கன்னான். இவன் பித்தளையாலும், தாமிரத்தினாலும பாத்திரங்கள் செய்கிறான். இவன் தாமிரத்தினால் தவலை, குடம், பொம்மை முதலியனவும் செய்வான். தாமிரத்துக்குச் செப்பு என்றும் பெயர். செம்பு சிவப்பு நிறமுடையது.

10. செம்பு பித்தளைப் பாத்திரங்களில் சீக்கிரம் பச்சையாய்க் களிம்பு ஏறும். ஆதலால் இவைகளில் வைக்கப்படும் புளிப்புப் பதார்த்தங்கள் விரைவில் கெட்டுப்போகும்.



11. இதில் ஒருவன் தகரம் உருக்குகிறான். உருக்கின தகரத்தைச் செம்பு, பித்தளைப் பாத்திரங்களில் பூசுகிறான். தகரம் பூசப்பட்ட பாத்திரங்களில் களிம்பு ஏறாது. இதற்காகவே தகரம் பூசுவது வழக்கம். தகரத்தை வெள்ளீயம் என்று சொல்லுகிறார்கள். இதனால் பூசப்பட்ட இரும்புத்தகடு தகரமென்று வழங்குகிறது.

12. ஈயம் மங்கலான வெண்மை நிறமுள்ளது, எளிதில் வளையக்கூடியது. இலகுவாய் உருகக்கூடியது. தகரத்தைப்போல் இதைக் கத்தியினுல் வெட்டலாம். ஈயத்தினுல் துப்பாக்கிக் குண்டுகளும், அச்சு எழுத்துக்களும் இன்னும் பலவிதமான சாமான்களும் செய்கிருர்கள்.

13. பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் ஆகிய இவையே பஞ்ச உலோகங்கள். இவை பூமியில் மண்ணுடன் கலந்திருக்கும். மண்ணி லிருந்து எடுத்துச் சுத்தப்படுத்துவார்கள்.

## 19. மழை.

கோபாலன், ஒரு நாள் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்கு வரும்பொழுது மழை பெய்தது. நனைந்துகொண்டே வீடுவந்துசேர்ந்தான்.

அவன்மீது இருந்த ஈரத்தை அவன் தாய் துடைத்தாள். அப்பொழுது அவன் தன் தாயாரைப் பார்த்து 'அம்மா! மழை பெய்வதால் என்ன பலன்? என்னை வீணய் நனைத்து விட்டதே!' என்ருன்.

தாய்:—கோபாலா? நீ நனைந்துவிட்டதால் ஒன்றும் குறைவில்லை. மழைபெய்வதால் கிணறு, குளம், ஆறு முதலியன நிரம்புகின்றன. புல் பூண்டுகள் முளைக்கின்றன. மரம் செடி கொடிகள் செழித்து வளர்கின்றன. நாம் சாப்பிடும் காய்கறிகள் தானியங்கள் உற்பத்தியாகின்றன. இதனுல்

நாம் உயிரோடு வாழ்கிறோம். அநேக பிராணிகளும் ஜீவிக்கின்றன.

கோ:—அம்மா! மழையினால் இவ்வளவு நன்மை இருக்கிறதென்று எனக்குத் தெரியாது. மழை எப்படி உண்டாகிறது?

தா:—இங்கே வா! காண்பிக்கிறேன். சாதம் சமைப்பதற்குப் பானையில் தண்ணீர் ஊற்றி, அடுப்பின் மீது உலை வைத்திருக்கிறேன் பார்.



கோ:—அம்மா! பானையைத் தொட்டால் சூடாய் இருக்கிறது; பானைக்குள் இருந்து புகையாய் மேலே போகிறதே! அது என்ன?

தா:—கொதித்த தண்ணீர், நீராவியாக வெளியே வருகிறது. அது மிகவும் இலேசாய் இருப்பதால் மேலே போகிறது. இதோ ஈரமில்லாத ஒரு மூடியால் பானையை மூடுகிறேன். சற்று நேரம் கழித்து எடுத்துப்பார்.

ஆவணக்காப்பக
146867

கோ:—அம்மா! மூடியை எடுத்தேன். இதன் அடியில் தண்ணீர் வடிகிறதே! நீங்கள் மூடும்போது இதனடியில தண்ணீர்கிடையாதே! இப்போது தண்ணீர் எப்படி வந்தது?

தா:—நீ முன் பார்த்த நீராவியானது மூடியில் படிந்து நின்றது. மூடியைத் திறந்தவுடன், அதன்மீது குளிர்ந்த காற்றுப்பட்டுத் தண்ணீராய் மாறி வடிகின்றது.

இவ்விதமாகவே குட்டை, குளம், ஆறு, கடல்களில் உள்ள தண்ணீர் சூரிய வெப்பத்தால் ஆவியாய் மாறி, ஆகாயத்தில் போய்ச் சேருகிறது. அங்கே அதன் உஷ்ணம் குறைந்து மேகமாய் நமக்குத் தோன்றுகிறது. மேகங்கள் பூமிக்குமேல் 2-3 மைல உயரத்தில் சஞ்சரிக்கின்றன. அதன்மீது குளிர்ந்த காற்றுப்பட்டதும் நீர்த்துளிகளாய் மாறி மழையாய்ப் பெய்கின்றது.

## 20. பிட்டுக்கு மண் சுமந்தது.

1. மதுரையை அரிமர்த்தன பாண்டியன் என்ற அரசன் ஆண்டுவந்த காலத்தில், ஒரு நாள் அதிக மழை பெய்தது. வைகை நதியில் வெள்ளம் பெருகி ஓடிற்று. அதனல் மதுரையே அழிந்துபோகும்போல் இருந்தது. குடிகள் எல்லோரும் அரசனிடம் சென்று முறையிட்டார்கள். வீட்டுக்குஒருவராய்ச்சென்று, அணையிட்டுக் கரையை அடைக்கும்படி அரசன் உத்தரவுசெய்தான். அதன்படியே வீட்டுக்கு ஒருவராய்ச் சென்று அணைபோடும் வேலை பார்த்தார்கள்.

2. அப்பொழுது வந்தி என்னும் ஒரு வாணிப ஏழைக்கிழவி இருந்தாள். அவளுக்குப் புருஷனும் இல்லை; பிள்ளைகளும் இல்லை; துணை ஒருவருமில்லாத அகதி. அவள் தினமும் பிட்டு விற்று ஜீவனம் செய்வாள். கடவுளிடத்தில் அதிக பக்தி உடையவள். இவளுக்காக அணை யிட ஆள் இல்லை. அரசன் கட்டளைக்குப்பயந்து மனம்வருந்தினுள். கடவுளை நினைத்து, "ஈசனே! நானோ அநாதை. கூலியாள் ஒருவரையுங் காணேன். அரசன் தண்டனை எவ்விதமோ அறி யேன். நீதான் இச்சமயம் உதவிசெய்ய வேண் டும்'' என்று துதித்தாள்.

3. கடவுள் இவள் துன்பத்துக்காக இரக்க முற்றுக் கூலியாளாக அத்தெருவின் வழியாய்க் கூலிக்கு வேலை உண்டோவெனக் கூவிக்கொண்டு வந்தார், வந்தியும் சந்தோஷத்துடன் அவரை அழைத்துத் தனக்குப் பதிலாய் அணையிடும்படி தெரிவித்தாள். கூலியாள், என்ன கூலி என்று கேட்டார். அதற்கு வந்தி, 'அப்பா! நானேபிட்டு விற்றுப் பிழைக்கும் ஏழை. உதிர்ந்த பிட்டைக் கூலியாகத் தருகிறேன்' என்றுள். கூலியாள் இதற்குச் சம்மதித்து 'உதிர்ந்த பிட்டைக் கொடு; நான் சாப்பிட்டுப்போய் வேலை பார்க்கிறேன்' என்று கேட்டார். வந்தியும் கொடுத்தாள்.

4. கூலியாள் பிட்டைத்தின்று, வைகைக் கரைக்குச் சென்ருர். அங்கே வேலை ஒன்றும் பாராமல் விளையாடித் திரிந்தார். அன்று வந்தி அவித்த பிட்டு எல்லாம் உதிர்ந்து போயின. கூலியாளும் அடிக்கடி வந்து, பிட்டு வாங்கித் தின்றுகொண்டே திரிந்தார். அந்தி நேரமாகியும் வந்தியின் பங்கு ஆகிய கரை அடைபட வில்லை. இதை அரசனிடம் தெரிவித்தார்கள்.

5. அரசன் விசாரித்ததில் கூலியாள் பதில் சொல்லவில்லை. தன்கையில் இருந்த பொற்பிரம்பினுல் கூலியாள் முதுகில் அரசன் ஒரு அடி அடித்தான். அந்த அடி அரசன் முதுகின் மீதும், உலகத்திலுள்ள அனைவர் முதுகின் மீதும் விழுந்தது. எல்லோரும் திடுக்கிட்டு என்னவென்று விசாரித்தார்கள். கூலியாள் ஒரு கூடை மண்ணை எடுத்துக் கரையில் போட்டார். அணையும் அடைபட்டது. கூலியாளாய்வந்தவர் மறைந்து விட்டார். இதைக் கண்ட அரசன் இது கடவுள் செயல் என்று ஆச்சரியமுற்ருன்.

6. கடவுள் அரசன் முன் தோன்றி 'நீ சுகமாய் வாழ்வாயாக' என்று அருள்புரிந்து, வந்திக்கும் மோக்ஷம் அளித்தார். பிள்ளைகளே! 'கடவுளை நம்பினேர் கைவிடப்படார்' என்ற வாக்கியம் உண்மை என்பதை அறியுங்கள்.



# 21. தண்டுகள்.

1. மேலே உள்ள மரத்தைப்பார். அதன் வேர்கள் பூமிக்குள் இறங்கி இருக்கின்றன. பூமியின்மேலே மரம் வளர்ந்திருக்கிறது. மரத்தின் உச்சியில் கிளைகள் விரிந்திருக்கின்றன.

2. பூமிக்குமேல், மரத்தின் கிளைகள்பிரியும் வரை உள்ளபாகத்திற்குத் தண்டு, அல்லது அடிமரம் என்று பெயர். தண்டு எப்பொழுதும் மேல்நோக்கியே வளரும். தண்டிலிருந்து கிளைகளும், கிளைகளிலிருந்து இலைகளும், பூக்களும் உண்டாகின்றன. தண்டு கிளைகளையும், இலைகளையும், புஷ்பங்களையும், காய்களையும், பழங்களையும் தாங்கி நிற்கிறது.

3 மரத்திற்கு வேண்டிய உணவுகள் வேர்களின் மூலமாய் வருகின்றன. தண்டுகளின் வழி

யாய் மேலே பரவுகின்றன. இலை உதிர்காலத்தில் மரத்திற்கு வேண்டிய உணவைத் தண்டு சேகரித்து வைக்கும்.

4. ஆலமரம், புளியமரம்; வேப்பமரம் போன்ற மரங்களின் தண்டுகள் தடித்து உறுதியாய் உள்ளவை. மரம் முழுதும் பட்டைகளால் மூடப்பட்டிருக்கும். இவைகளின் உட்புறம் கடினமாயும், வெளிப்புறம் மிருதுவாயும் இருக்கும். தென்னை, பனை மரங்களுக்கு வெளிப்பட்டை கிடையாது. உட்புறம் மிருதுவாயும். வெளிப்புறம் கடினமாயும் இருக்கும். மூங்கிலின் தண்டு குழலாயும் உறுதியாயும் இருக்கும். இது அதிக உயரமாய் வளரும். அநேக வருடங்கள் வரை ஜீவித்திருக்கும்.

5. மாதுளை போன்ற செடிகளின் அடி மரங்கள் கடினமானதல்ல. இவை 20 அடி உயரத்திற்கு மேல் வளரமாட்டா. கத்தரி, மிளகாய் போன்ற செடிகளின் தண்டுகள் எளிதில் ஒடியக்கூடியவை. இவை சுமார் 3 அடி உயரம் வளரும்.

6. பூசணி, அவரை, புடல், பீர்க்கு, வெற்றிலை முதலிய கொடிகளின் தண்டுகள் கயிறு போல் தரையில் படரும். இவை மரங்களின் மீதும் பற்றிப் படரும். புல்போன்ற நெல், கேழ்வரகு முதலிய பயிர்களின் தண்டுகள் மிகவும் மிருதுவானவை. இவை ஒரு வருடத்திற்குள் அழிந்துபோம்.

# 22. கல் எறிந்ததால் வந்தகஷ்டம்.

நந்தவனத்திலோராண்டி என்ற சந்தம்.

கண்ணிகள்.

1. முத்து என்ற ஒருபையன்-அவன்
மூர்க்கன், சோம்பேறி போல் லாமுழுப் போய்யன்

2. கல்லுங் கையு மாகத் திரிவான் - தெருவில்
கண்டதும், நாய்களைக் கதறவே எறிவான்

3. மரங்களில், ஏறிக் குதிப்பான் - கல்லை
வாரியே, வீசிப் பழங்கள் உதிர்ப்பான்

4. ஒருநாள், வழியோடு சென்றான் - சாலை
ஓரத்தில், நாவல் மரங்கண்டு நின்றான்

5. பழம் வீழக் கல்லால் அடித்தான் - கிளையில்
பட்டது, திரும்பிடப் பார்த்துத்துடித்தான்

6. வேகத்தால், அவன் தலைமேலே - வந்து
விழுந்தது, மண்டை உடைந்ததினாலே

7. பலநாள் வரை பெருங் கஷ்டம் - பட்டான்
பாருங்கள், அதனாலே பணங்கூட நஷ்டம்

8. கல்லெறிந்தால் வரும் கேடு - நன்றாய்க்
கவனிப்பீர், பாலரே காரணத் தோடு

9. இப்படி விளையாடல் தீது - நீங்கள்
இதைப்போலவே, விளையாடக் கூடாது(மு)

# 23. கெடுவான்கேடு நினைப்பான்.

1. பிள்ளைகளே! இரண்டு மலைகளுக்கு இடையில் இருக்கும் இடைவெளிக்குப் பள்ளத் தாக்கு என்றுபெயர். இவ்வகைப் பள்ளத்தாக்கு களின் வழியாய்ப் பாதைகள் ஏற்பட்டிருந்தால் அதற்குக் கணவாய் என்று பெயர்.

2. மதுரைக்குத் தென்மேற்கிலுள்ள நாக மலையில், மேலக்கால் கணவாய் என்று ஓரிடம் உண்டு. அதன் வழியாக மதுரையிலிருந்து திருமங்கலத்திற்கு ஒரு பாதை போகிறது. இப் பாதை காட்டுமார்க்கமாய் இருப்பதால் இவ் வழியாய் அதிகமான ஜனங்கள் செல்லுவதில்லை.

3. ஒருநாள் இப்பாதை மார்க்கமாய் ஒரு ஸ்திரீ தனியாய்ப் பிரயாணம் செய்தாள். அவளுக்கு ஒரு கைக் குழந்தை இருந்தது. அவள் அதிக நகை அணிந்திருந்தாள். சிறிது தூரத் தில் அவளுக்குப் பின்னால் ஒருவன் வண்டி ஓட்டி வந்தான். அவ் வண்டிக்காரன் அந்த ஸ்திரீ அணிந்திருந்த நகைகளை அபகரிக்க எண்ணினான். அவளிடத்தில் நயவஞ்சகமாய்ப் பேசினான். தந்திரமாய் அவளைத் தன் வண்டி யில் ஏற்றிக்கொண்டான்.

4. வண்டி சிறிது தூரம் சென்றவுடன் பொழுது இருட்டிற்று. அப்பாதை யோரமாகக் கிணறு ஒன்று இருந்தது. மாட்டிற்குத் தண் ணீர் காட்டுவதுபோல நடித்து, அக்கிணற்றின் பக்கத்தில் வண்டியை நிறுத்தினான். அம் மாதைக் கீழே இறக்கினான். அவள் இறங்கிய

வுடன் அவள் அணிந்திருந்த ஆபரணங்களைக் கழற்றித் தரும்படி சொல்லிப் பயமுறுத்தினான். பயத்தால் அவள் நடுங்கி நகைகளைக் கழற்றிக் கொடுத்தாள். இவ்விஷயம் வெளிக்கு வந்தால் தனக்குக் கேடு விளையும் என வண்டிக்காரன் நினைத்தான். தன்னைக் காப்பாற்றுவதற்காக முதலில் குழந்தையையும், பின் அவளையும் பிடித்துக் கிணற்றில் தள்ளினான். கிணற்றில் ஜலம் அதிகமில்லாததால் இருவரும் இறக்கவில்லை. உயிருடனிருந்தார்கள். அவர்கள் சாகவில்லை என்பதை அவனறிந்து, கிணற்று ஓரத்திலிருந்த ஒரு பெரிய கல்லை அவர்கள் தலையில்போட நினைத்து அதைத் தூக்கினான்.

5. அக் கல்லின் அடியில் ஒரு நாகம் இருந்து அவனைத்தீண்டிற்று. அதனால் விஷம் அவன் தலைக்கு ஏறி உடனே இறந்தான்.

6. மறுநாள் அவ்வழியாக வந்த ஜனங்கள் வண்டிக்காரன் செத்துக் கிடப்பதையும், மாடும் வண்டியும் நிற்பதையுங் கண்டு, அதன் விஷயத்தை அறியக் கிணற்றோரமாய்ச்சென்றார்கள் கிணற்றுக்குள் இருந்த மாது நடந்த சங்கதியை வெளியிட்டாள். பிறகு ஜனங்கள் குழந்தையையும், அவளையும் மேலே தூக்கினார்கள்.

7. நாம் ஒருவருக்குக் கெடுதி செய்ய நினைத்தால் அக்கேடு நமக்கு வரும் என்பது இச் சரித்திரத்தால் விளங்குகிறது.

8. ஆகையால் நாம் ஒருவருக்கும் தீமை செய்ய நினைக்கக் கூடாது.



## 24. பயிரிடும் நிலங்கள்.

இராமன் தகப்பனுர் ஒரு நாள் காலையில் வெளியே புறப்பட்டார். இராமன் தன் தகப்பனுரைப்பார்த்து, "அப்பா! எங்கே போகிறீர்கள்? நானும் வருகிறேன்" என்ருன்.

தகப்பனுர்:-"மகனே! நமது நிலத்திற்குப் போகிறேன்; நீயும் வா போகலாம்" என்ருர்.

இருவரும் தங்கள் நிலத்தின் சமீபத்தில் வந்து சேர்ந்தார்கள். அங்கே அவர்கள் வேலைக்காரனுன குப்பன் நிலத்தை உழுதுகொண்டிருந்தான். இராமன் தகப்பனுரைப்பார்த்து "அப்பா! இந்த நிலம் மேடாகவும், அடுத்த நிலம் பள்ளமாகவும் இருக்கிறதே; இவைகளில் என்ன விளையும்" என்று கேட்டான்.

தக:-மகனே! மேடாக உள்ளது புன்செய் நிலம். பள்ளமாக உள்ளது நன்செய் நிலம். நன்செய் நிலத்தில், நெல், வாழை, கரும்பு, முதலிய பயிர்களும், புன்செய் நிலத்தில் கம்பு; சோளம், வரகு முதலிய தானியங்களும், உளுந்து, மொச்சை முதலிய பயறு வகைகளும் விளையும்.

மக:-அப்பா! அப்படியானால் நமது குப்பன், இப்போது புன்செய் நிலத்தை மட்டும் உழுவதேன் ?

தக:-மகனே! புன்செய் நிலத்திற்குத் தண்ணீர் பாய்வது இல்லை. மழை ஈரத்தினால் புன்செய்ப்பயிர் விளையும். அதனால்தான் புன்செய் நிலத்தை உழுதுகொண்டிருக்கிறான். நிலத்தை உழுது பண்படுத்தித் தயாராய் வைத்திருந்தால், அடுத்த மழை பெய்தவுடன் விதை விதைத்து விடலாம். மழை ஈரத்தினால் விதை முளைத்து வளர்ந்து பலனைக் கொடுக்கும.

மக:-அப்பா ! அப்படியானால் நன்செய் நிலத்தை, எப்பொழுது உழுது பயிர்செய்வான்?

தக:-மகனே! மழைபெய்து ஜலம் ஆற்றுக்கால் வழியாய் வந்து நமது கண்மாய் (ஏரி) நிரம்பும். கண்மாய் நிரம்பியவுடன் மடையின் வழியாய் ஜலம் வெளியில் வரும்; அந்த ஜலம் கால்வாயின் வழியே நமது நன்செய் நிலங்களுக்குப் பாயும். அப்பொழுது குப்பன் நன்செய் நிலத்தை உழுது, பரம்பு அடித்து அதில் நெற்பயிர் செய்வான்.

## 25. மூத்தோர்சொல்லைத்தட்டாதே.

1. மதுரையைத் திருமலைநாயக்கர் ஆண்டு வந்த காலத்தில், மகாதேவ பண்டிதர் என்ற தேர்ந்த வைத்தியர் ஒருவர் இருந்தார். அவருக்கு இரண்டு குமாரர்கள் இருந்தனர். அவர்களில் மூத்தவன் பெயர் சுந்தரம். இளையவன் பெயர் மந்திரம்.

2. மகாதேவ பண்டிதர் தம் பெட்டியில் அநேகவித மருந்துகள் வைத்திருந்தார். தாம் வெளியில் போயிருக்கும், வேளைகளில், ஒருவரும் மருந்துப் பெட்டியைத் திறக்கக் கூடாதென்று தம் பிள்ளைகளுக்குச் சொல்லி யிருந்தார்.

3. நாயக்கருக்கு ஒருநாள் தேகம் சற்று அசௌக்கியமாயிருந்தது. இது பண்டிதருக்குத் தெரிந்தது. வேண்டிய மருந்துகளை எடுத்துக் கொண்டு அரமனைக்குச் சென்றார். அவசரத்தில் அவர் மருந்துப் பெட்டியைப் பூட்டாமல் போய்விட்டார்.

4. அச்சமயம் சுந்தரம், மந்திரம் என்ற இருவரும் விளையாடிக்கொண் டிருந்தனர். பின், தகப்பனார் மருந்து வைத்திருக்கும் அறைக்குள் மந்திரம்புகுந்து, சுற்றிப் பார்த்தான். சுந்தரம், மந்திரத்தைப் பார்த்து, 'தம்பி! அப்பா இல்லாத வேளையில் அந்த அறைக்குள் நுழைய வேண்டாம்' என்றான்.

5. மந்திரம்:-அண்ணா! இங்கே வாரும். மருந்துப் பெட்டி பூட்டாமல் இருக்கிறது பாரும்.

6. சுந்தரம்:- தம்பி! அதில் ஒன்றையும் நீ தொடாதே. அப்பா இல்லாத சமயத்தில் மருந்துகளை நாம் தொடக்கூடாது என்று சொல்லி இருக்கிருர் அல்லவா?

7. ம:- நான் ஒன்றையும் தொடவில்லை. அப்பா நமக்குக் கற்கண்டு கொடுப்பாரல்லவா? அதோ ஓர் சீசாவில் இருக்கிறது. அதில் கொஞ்சம் எடுத்துத் தின்போம்.

8. சு:-நீ அப்பா சொல்லி யிருப்பதை மறந்து விட்டாயா? ஒன்றையும் தொடாதே! தொடாதே! தொட்டால் ஏதேனும் கஷ்டம் உண்டாகும்.

9. ம:- வேருென்றையும் தொடவில்லை. கற்கண்டு மாத்திரம் ஒரு துண்டு எடுத்து வாயிற் போட்டுக்கொண்டேன்.

10. அவன் தின்றது கற்கண்டு அல்ல; பாஷாணம் கலந்த ஓர் ஔஷதம். சற்று நேரத்தில் 'அண்ணு! அண்ணு!! வயிறுஎரிகிறது, வாந்தி வருகிறது, மயக்கம் உண்டாகிறது, என்று கதறிக்கொண்டே கீழே விழுந்தான்.

11. உடனே சுந்தரம் அலறிக்கொண்டு ஓடித் தன்தாயாரிடம் சொன்னுன். தாயும் வந்து பார்த்து மிகவும் வருத்தமுற்று மகன் செய்தியைப் பண்டிதருக்குச் சொல்லி யனுப்பினுள்.

12. பண்டிதரும் ஓடிவந்தார். பிள்ளையைப் பார்த்தார். பாஷாணம் கலந்த மருந்தைத் தின்று விட்டானென்று அறிந்தார். உடனே பலவித மாற்று மருந்து கொடுத்தார். மந்திரன் பலநாள் கஷ்டப்பட்டுப் பின் சுகமடைந்தான்.



## 26. கேலியினால் வந்த கெடுதி.

1. வடக்கே வெகு தூரத்தில் அயோத்தி என்று ஒரு நகரம் இருக்கிறது. முன் ஒரு காலத்தில் அதைத் தசரதர் ஆண்டு வந்தார். இவருக்கு மூன்று மனைவிகள் இருந்தனர். அவர்களில் கோசலைக்கு இராமனும், சுமத்திரைக்கு இலக்குமணனும், சத்ருக்கனும் கைகேசிக்குப் பரதனும் ஆக நான்கு குமாரர்கள் பிறந்தனர்.

2 இவர்கள் இளமையிலேயே சகல வித்தைகளையும் நன்றாய்க் கற்று அறிந்தனர். மூத்த குமாரனான இராமன் வில் வித்தையில் தேர்ந்தவன். குறி பார்த்து எய்வதில் நிகரில்லாதவன்.

3. இவர்கள் அரமனையின் தோட்டத்தில் அம்புவிட்டு விளையாடுவது வழக்கம். அங்கே

மந்தரை என்ற வேலைக்காரி ஒருத்தி இருந்தாள். அவள் கிழவி; கூன் முதுகு உடையவள். ராஜ குமாரர்கள் அவளைக் காணும்போதெல்லாம் கேலி செய்வார்கள். இராமன் அவள் கூனலின் மீது விளையாட்டாய், வில் உண்டையால் அடிப்பான். அச்சமயம் அவளுக்கு அதிக வருத்தம் உண்டாகும். மனத்தில் இதனுல் ராமன் மீது அடம் வைத்துக் கொண்டே இருந்தாள்.

4. இராமனுக்குப் பருவம் வந்தபோது பட்டாபிஷேகம செயய அவன் தகப்பனுர் நிச்சயித்தார். இதைப் பார்த்த கூனி இவனுக்குக் கெடுதல் செய்ய இதுதான் சமயம்என்று நினைத்தாள். உடனே கைகேசி இடம் சென்றுள்.

5. "கைகேசி! நாளை இராமனுக்குப்பட்டாபிஷேகமாம். பட்டம் ஆய்விட்டால் உன்னையும், உன் மகனையும், என்னையும் நாட்டை விட்டுத் துரத்தி விடுவான். இப்பொழுதே தசரதரிடம் உன் மகன் பரதனுக்குப் பட்டம் கட்ட வேண்டு மென்றும், காட்டுக்கு இராமனை அனுப்பவேண்டுமென்றும் வரம் வாங்கு" என்றுள். கைகேசியும் இணங்கி, அரசனிடம் வரம் பெற்றுள். இராமனைக் காட்டுக்குத் துரத்தி விட்டாள். காட்டில் திரிந்து இராமன் மிகவும் கஷ்டப்பட்டான்.

6. பிள்ளைகளே! கேலியால் வந்த கெடுதியைப் பார்த்தீர்களா? ஆதலால் நீங்கள் ஒருவரையும் கேலி செய்யாதீர்கள்.

## 27. கேலியினுல் வந்த கெடுதி, பாட்டு.

சுத்தப்ரம்ம பராத்பரராம் என்ற சந்தம்.

கண்ணிகள்.

அயோத்தியென்றோரு ராஜ்ஜியமாம்
அதனைத்தசரதர் ஆண்டனராம்
அவருக்கு மூன்று மனைவியராம்
அருமைப்புத்திரர் நால்வர்களாம்

நால்வரில் கோசலை மகன் ராமன்
நலமுள கைகேசி மகன் பரதன்
நற்குணசுபத்திரையின் புதல்வர்
நயலக்குமணன் சத்ருக்கன்

இவர்களில்ராமன்மூத்தவனும்எல்லாவித்தையும்கற்றவனும்
இசைபெறுகிறவில் வித்தையிலே
இளையவர்களில் இவன் வலியவனும்

அரமனைப்பின்புறச்சோலையிலே அம்பெய்துவிளையாடயிலே
அங்கோருகிழவியும் வருவாளாம்
அவள்கூனிபெயர் மந்தரையாம்

விளையாட்டா யவள் மேல் ராமன்
வில்லுண்டையினு லடிப்பானும்
விசனத்துடன் அடம் அவன்மீது
வெகுநாள் மனத்தினில் வைத்தனளாம்

பட்டாபிஷேகமேநடத்துதற்குப் பகர்ந்தார்தசரதர்ராமனுக்கு,
பரபரப்புடன்கூனி சென்றனளாம்
பாவைகைகேசிமுன் நின்றனளாம்

அடவிக்கு ராமனைத் துரத்திடவும்
அயோத்தியைப் பரதன் ஆண்டிடவும்
திடவரம் தசரதனிடம் பெறவே
திருப்பினுள் கைகேசி மனமுறவே

அவ்விதமே கைகேசிவரம் அடைந்தாள் தசரதராஜனிடம்.
ஒவ்வாக்காட்டுக்குராமனையே ஓட்டினள்பொல்லாக்கைகேசி
காட்டில்திரிந்துராமனுமே கஷ்டப்பட்டான்பலதினமே.
கேட்டீரிக்கதை பாலர்களே கேலிசெய்யார்தீர் சீலர்களே.

---

# 28. படிப்பினால் பணம் வந்தது.

1. சென்னபட்டணம் என்று ஒரு சிறந்த நகரம் இருக்கிறது. அது செல்வத்திலும், வியாபாரத்திலும் செழிப்பாயுள்ளது. பல ஊர்களில் இருந்தும் வர்த்தகர் பலர், வியாபாரத்திற்காக அங்கு வருவது வழக்கம். வரும்போது ஏராளமாய் ரூபாய்களும், நோட்டுகளும் கொண்டு வருவார்கள். வந்தவர்களில் ஒருவர், வழியில் ஒரு நோட்டைத் தவறவிட்டுப் போய் விட்டார்.

2. சமீபத்தில் சிற்றூர் என்று சிறு ஊர் ஒன்று உண்டு. அவ்வூரில் ஒரு பெரியவருக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். அவர்களில் மூத்தவன் படிப்பு இல்லாதவன். இளையவன் படித்தவன். இருவரும் சில சாமான்கள் வாங்குவதற்கு ஒருநாள் சென்னபட்டணம் வந்தார்கள்.

3. வரும் வழியில் மூத்தவன் காலடியில் ஒரு நோட்டுக்கிடந்தது. அவன் அதைக் குப்பைக் காகிதம் என்று எத்தி விட்டுப் போனான். அண்ணன் எத்தியது என்னவென்று தம்பி கவனித்தான். அது நூறு ரூபாய் பெறுமான நோட்டாய் இருந்தது, உடனே எடுத்தான்.

4. அண்ணு! நீர் காலால் எத்தியது நூறு ரூபாய்நோட்டென்று காண்பித்தான். அண்ணன் படியாதவன். ஆனதால் விழித்தான். அச்சமயம் நோட்டைத் தவறவிட்டவர் அவ்வழியாக மிக்க வருத்தத்தோடு தேடிவந்தார். இளையவன் அவர் குறிப்பை யறிந்து, நோட்டைத் தந்தான்.

5. அப் பெரியவர் பையனுடைய குணத் திற்காகப் புகழ்ந்து, இருபத்தைந்து ரூபாய் இனும் கொடுத்தார். அவர்கள் சந்தோஷமாய்ச் சாமான்கள் வாங்கி வீட்டுக்குத் திரும்பினர்கள். மூத்தவன் வெட்கம் அடைந்தான். பிள்ளைகளே! படிப்பினல் வந்த பணத்தைப் பார்த்தீர்களா? படியாதவன் மடையன்என்பதைக்கவனியுங்கள்.

## 29. நன்றியுள்ள சிறுவன்.

### (முதல் பாகம்)

அத்தினபுரியை ஆண்டுவந்த சந்தனுரா ஜன் ஒரு நாள் வேட்டையாடக் காட்டிற்குச் சென்முன். வேட்டை முடிந்து திரும்பும் வழி யில் ஓர் அழகான மானைக்கண்டான். அதை எய்வதற்குக் குறி பார்த்தான். இதைக்கண்ட மான் வேகமாய் ஓடிற்று. அரசன் தன் சேனை களை விட்டு, மானைப் பின் தொடர்ந்து வெகு தூரம்ஓடினன், மான் அகப்படாமையால்திரும் பினன். வழி தெரியாமல் திகைத்துச் சுற்றி லும் பார்த்தான். வெகு தூரத்தில் ஒரு ஆட்டு மந்தை இருப்பதைக் கண்டான. அங்கு சென்று காவலிருந்த இடைப் பையனைப் பார்த்து,



## பாட்டு.

குற்றம் நீ குணங்கள் நீ என்ற சந்தம்.

ஆடு மேய்க்கும் அருமைப்பாலா
அருகில் ஏதும் ஊர் உண்டோ ?
அறியும்படி சொல்லுவாய் நீ அதற்குப் பாதையும் உண்டோ?

பிள்ளாய்! பக்கத்தில் ஏதேனும் ஊர் இருக்கிறதா? எந்த வழியாய்ச் செல்லவேண்டும்?

பை:-ஐயா ஓர் ஊர் அங்கே உண்டு
அது சமீபம் காணுவீர்.
ஆனால்நல்ல பாதையல்ல அதிக கஷ்டம்பேணுவீர்.

ஐயா! இதோ தோன்றும் வழியாய்ச் சென்றால், அருகே யுள்ள ஊர் போய்ச் சேரலாம். பாதையிலிருந்து பல கிளைகள் பிரிகின்றன. கவனியாமல் சென்றால் வழி தவறி விடுவீர்கள்.

அர:-பையா மெத்தப் பசியெனக்குப்
பாதைகாட்ட வருவையே
பக்கமேயேன் கூடவந்தால் பரிசளிப்பேன் பெறுவையே.

நான் பசியாலும் தாகத்தாலும் வருந்துகிறேன். சமீபத்தில் உள்ள ஊர்வரை நீ வந்து வழிகாட்டினுல் உனக்கு வெகுமதி அளிப்பேன்.

பை:-என்னுல் அது முடியாதையா
இங்கு திருடர் மிருகங்கள்
இருப்பதாலே தீங்குநேரும் எப்படியும் உணருங்கள்.

ஐயா! ஆடுகளை விட்டு வந்தால் துஷ்டமிருகங்கள் கொன்றுவிடும், அல்லது திருடர்கள் கொண்டுபோய்விடுவார்கள். நான்வரமாட்டேன்.

அர:-தம்பி இதில் ஒன்றிரண்டு
தவறிப்போனுல் நஷ்டமா?
தருவேனதன் விலைதனையும் தான்பெறவே இஷ்டமா?

தம்பி! ஆட்டுமந்தை உன்னுடையதல்ல; ஒன்று இரண்டு தவறினுலும் ஒருவரும் அறியார். உன் எஜமானனுக்கும் தெரியாது. என்னேடு வந்தால்உனக்கு வெகுமதி அளிப்பதோடு, தவறின ஆடுகளின் கிரயத்தையும் தருகிறேன்.

பை:-என்னை நம்பி ஒப்புவித்தார்
இவ்வளவும் ஏகமே
எண்ணுவேனே பேதகந்தான் எஜமானுக்குத் துரோகமே.

ஐயா! என் எஜமானர் ஆடுகளையெல்லாம் என்னிடம் ஒப்புவித் திருக்கிருர். நான் கவனமாய்ப் பார்த்துக் கொள்வேன் என்று என்னை நம்பி இருக்கிருர். ஆதலால் நான்வரமாட்டேன்.

# 30. நன்றியுள்ள சிறுவன்.

## (இரண்டாம் பாகம்.)

பையன் தான் வரமுடியாதென்று சொன்னதைக் கேட்டு அரசன் வருத்த மடைந்து, வேறு வழியில்லாமல் திகைத்தான். தன்னுடைய பெருமையையும், தனக்கு இப்போது ஏற்பட்ட பசியின் கொடுமையையும், வழி தெரியாது நேர்ந்த கஷ்டத்தையும் நினைத்தான். இந்தப் பையனைத் தவிர வேறு கதி யில்லை யென்று எண்ணி அவனைப் பார்த்து,

அர:-பாலனே நான் ஆட்டுமந்தை
பார்த்திருப்பேன் ஊர்சென்று
பாதைகாட்டக் கூலியாளும் பக்ஷணமும் வாகோண்டு

நானோ பசியால் களைத்துவிட்டேன். நீ எங்கேயாவது சென்று எனக்குச் சிற்றுணவு வாங்கிக்கொண்டு, வழி காட்ட ஒரு கூலி ஆளும் அழைத்துவா, பணம் தருகிறேன். நீ வரும் வரை உனக்குப் பதிலாக மந்தையை நான் பார்த்துக்கொள்கிறேன்.

பை:-ஒன்ருய் மேயும் ஆடுகளும்
உமது குரலை அறியுமோ ?
ஓடிப்போகும் கிடையைவிட்டு உணர்வீர்ஞாயம் ஆகுமோ ?

என் ஆடுகளுக்கு உம்முடைய குரல் தெரியாது. நான் இல்லாவிடில் அவை இங்கும் அங்கும் ஓடும்; நீர் புதியவரானதால் அவை உமக்கு அடங்கமாட்டா. நான் போகமுடியாது.

அர:— (கோபத்தோடு)

அற்பனே நீ அசட்டையாக
அவமதிப்புக் கொள்கிறுய்.
ஆனமட்டும் சொல்லச்சொல்ல ஆணவமாய் விள்கிறுய்.

அடா! அற்பப்பயலே! நான் எவ்வளவு சொல்லியும் உனக்கு ஏற்கவில்லை யல்லவா?

பை:—என்னைப்போல நீங்கள்யார்க்கும்
இதம்புரியச் செல்லுவீர்
எந்தன்ஆட்டைக் காப்பவர்யார்? இதையறிந்து சொல்லுவீர்.

ஐயா! கோபம் வேண்டாம். எனக்குப் பதிலாக நீங்கள் ஆட்டைக் காக்கும்போது, எவரேனும் இம்மாதிரி தங்கள் உதவியை வேண்டிஞல், தாங்களும் போய்விடுவீர்கள். அப்பொழுது என் ஆடுகளைக் காப்பவர்யார்? தாங்கள் கோபிக்காமல் நன்றுய் யோசிக்கவேண்டும்.

அர:— (வெட்கம் அடைந்து)

உண்மையுள்ள சிறுவன் என்று
உன்னைப்பற்றி மகிழ்கிறேன்.
உரைத்தபடி இந்தப்பாதை ஊருக்குப்போய் வருகிறேன்.

நீ நல்ல புத்திசாலி. உன் எஜமானிடத்தில் வைத்திருக்கும் விசுவாசத்திற்காகமெச்சுகிறேன். நீ காட்டிய வழியே போய்ப் பார்க்கிறேன்.

பை:-என்னிடத்தில் கஞ்சிகொஞ்சம்
இருக்குதையா உண்ணுவீர்
இளைப்புத்தீர்த்துக் கொண்டபின்னர் ஏகியவ்வூர் நண்ணுவீர்

ஐயா! என்னிடம் உள்ள கஞ்சியைக் குடித்துக் களை தீர்த்துப் போகலாம், என்று சொல்லித் தன்னிடமுள்ள கஞ்சியைக் கொடுத்தான்.

அர:-உத்தமா வுன் குணத்துக்காக
உண்ணுகிறேன் நேசனே
உலகில் நீயே எஜமானுக்கு உற்றவிசு வாசனே.

அரசனும் சிறுவன் குணத்தைக் கண்டு மகிழ்ந்து. கஞ்சியாயினும் அதை வாங்கிக் குடித்தான். அப்பொழுது அரசனுடைய பரிவாரங்கள் அங்கேவந்து சேர்ந்தன. பையன் அதைப் பார்த்து ஆச்சரிய மடைந்து,

அவனியாளும் அரசனென்று
அறிந்துகொண்டேன் ஐயனே
ஆதரிக்கவேண்டு மென்னை அன்புமிக்க மெய்யனே.

அரசே! தாங்கள் இன்னாரென இப்பொழுது அறிந்துகொண்டேன். என்னை மன்னிக்க வேண்டும் என்று வணங்கி நின்றான்.

அர:-உன்னை நானே படிக்கவைப்பேன்
உயர்ந்த நல்ல வகுப்பிலே
உத்தியோக் முந்தருவேன் உத்தமா என் பொறுப்பிலே.

பையனையும், அவன் பெற்றோர்களையும் அரசன் தன்னோடு கூட்டிப்போய். அவர்களுக்கு வெகுமதி அளித்துப்பையனையும் நன்றாய்ப்படிக்கவைத்தான், பையன் நன்றாய்க் கற்று, அறிவில் முதிர்ந்து இந்த அரசனுக்கே மந்திரியானான்.

# 31. கடிதம் எழுதும் முறை.

நிலக்கோட்டை,

14௳ அக்டோபர்௴ 1927.

சிரஞ்சீவி தம்பி ஆறுமுகத்திற்கு, கடவுளு டைய திருவருளால் எல்லா நன்மையும் பெருக வேண்டுகிறேன்.

இவ்விடத்தில் நான், அப்பா, அம்மா, தங்கை மீனாள் முதலிய யாவரும் க்ஷேமமாய் இருக்கிறோம். அவ்விடத்தில் உள்ளவர்களு டைய க்ஷேமத்தை அறிய விரும்புகிறேன்,

உன்னிடத்திலிருந்து வெகு நாளாகக் கடி தமே வரவில்லை. தினந்தோறும் தவறாமல் பாட சாலைக்குப் போய்வருகிறாயா? பாடங்களைச் சரி யாய்ப் படி. உபாத்தியாயருக்குக் கீழ்ப் படிந்து நட, உன்னைத் தாயார் நினைத்துக்கொண்டே இருக்கிறார்கள், அடுத்த மாதம் தீபாவளி வரு கிறது. விடுமுறை நாளில் புறப்பட்டு வா- உடனே பதில் எழுது.

இப்படிக்கு,

உன் அன்புள்ள தமையன்,

இராமசாமி.

---

இது தமையன் தம்பிக்குக் கடிதம் எழுதும் முறை.

## விலாசம் எழுதும் முறை.




சிரஞ்சீவி,

**ஆறுமுகம்,**

மூன்றும் வகுப்பு,

முனிசிபல் யாதவ ஸ்கூல்,

மதுரை.

மதுரை,
15௳ அக்டோபர் ௴ 1927௵.

அன்புள்ள அண்ணா அவர்களுக்கு, ஆறுமுகம் அநேக நமஸ்காரம் செய்து எழுதிக்கொண்டது.

இவ்விடம் நான், அத்தை, மாமா யாவரும் க்ஷேமமாய் இருக்கிறோம். தாங்கள் அனுப்பிய கடிதம் இன்று கிடைத்தது.

நான் பள்ளிக்கூடத்திற்கு ஒழுங்காய்-போய் வருகிறேன். உபாத்தியாயர் கற்பிக்கும் பாடங்களைக் கவனித்துப் படிக்கிறேன்.

இந்த வருடம் நடக்கும் பரீக்ஷையில் தேறிவிடுவேன். பரீக்ஷை சமீபத்திலிருப்பதால் நான் அங்கேவரமுடியாது. அப்பா அவர்களிடம் சொல்லி, எனக்குச் சோமனும். சட்டையும் வாங்கி அனுப்பக் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் பிரியமுள்ள தம்பி,

ஆறுமுகம்.

# 32. விடுகதைகள்.

ஒரு புட்டியில் இரண்டு தைலம். (முட்டை)

உத்தியோகம் இல்லாமல்
ஓடித்திரிகிறுன் ஒருவன். (நாய்)

வண்ணுன் வெளுக்காத வெள்ளை,
மழை பெய்யாத தண்ணீர்,
குயவன் பண்ணுத பாண்டம். (தேங்காய்)

சிறு சிறு கதவுகள், செய்யாக்கதவுகள்,
திறக்க அடைக்கச் சத்தம் செய்யா. (கண் இமை)

பட்டை பட்டை நீக்கி, பதினுறு பட்டை நீக்கி,
முத்துப்பட்டை நீக்கி முன்னேவராள் சீமாட்டி
(வாழைப்பூ)

ஆடி அசைந்துவர, அடியில் சிந்திவர,
கூடிய பெண்கள் குடுமியை ஆட்டிவர,
குந்தியிருக்கும் கூகை என்ன? (திரிகை)

சாய்ந்த மலை ஓரத்தில் இருவர்
கிட்டக் கிட்ட இருக்கிறுர்கள். ஆனுல்
ஒருவரோடொருவர் பேசுவதில்லை,
தொடுவது மில்லை. அவர்கள் யார்? (கண்கள்)

கத்திபோல் இலையிருக்கும் கவரிமான் பூபூக்கும்,
தின்னப் பழம் பழுக்கும் தின்னுத காய்காய்க்கும்
(வேப்பமரம்)

# ஆத்திசூடி.

1. அறஞ்செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. உடையது விளம்பேல்.
6. ஊக்கமது கைவிடேல்.
7. எண்ணெழுத் திகழேல்.
8. ஏற்பது இகழ்ச்சி.
9. ஐயம் இட்டு உண்.
10. ஓதுவது ஒழியேல்.
11. ஔவியம் பேசேல்.
12. கண்டு ஒன்று சொல்லேல்.
13. ஞயம்பட வுரை.
14. இணக்கமறிந்து இணங்கு.
15. தந்தை தாய்ப் பேண்.
16. நன்றி மறவேல்.
17. வஞ்சகம் பேசேல்.
18. இளமையிற் கல்.
19. காப்பது விரதம்.
20. குணமது கைவிடேல்.
21. கெடுப்பது ஒழி.
22. கேள்வி முயல்.
23. சான்றோர் இனத்து இரு.

24. சுளிக்கச் சொல்லேல்.
25. சூது விரும்பேல்.
26. சேரிடம் அறிந்து சேர்.
27. செய்வன திருந்தச்செய்.
28. சோம்பித் திரியேல்.
29. துன்பத்திற்கு இடங்கொடேல்.
30. தெய்வம் இகழேல்.
31. நன்மை கடைப்பிடி.
32. நாடு ஒப்பனசெய்.
33. நோய்க்கு இடங்கொடேல்.
34. பிழைபடச் சொல்லேல்.
35. பெரியாரைத் துணைக்கொள்.
36. பொருள்தனைப் போற்றிவாழ்.
37. மீதூண் விரும்பேல்.
38. மேன்மக்கள் சொற்கேள்.
39. மொழிவது அறமொழி.
40. வித்தை விரும்பு.
41. உத்தமனு யிரு.
42. வெட்டெனப் பேசேல்.
43. வைகறைத் துயில் எழு.
44. நீர் விளையாடேல்.
45. ஓரஞ் சொல்லேல்
46. மூர்க்கரோ டிணங்கேல்.

146867

# மதுரை, புத்தகவியாபாரம்
# இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன் வெளியிட்ட
# தமிழ்ப் புத்தகங்கள்.

*துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப் பெற்றன.*

---

புதிய பாடப் புத்தகங்கள்:—இவை துரைத்தனத்தார் விதிகளை அனுசரித்து, நூதன போதனமுறைக் கிணங்க சுகாதாரம், அரசியல், பூமிசாஸ்திரம், இலக்கணம், தேகதத்துவம், பிராணிசாஸ்திரம், தாவரசாஸ்திரம், புராணம், சரித்திரம் முதலியன வகுப்புக்குத் தக்கவாறும், மாணவர்கள் எளிதில் உணருமாறும், சிறந்த தமிழ் நடையில் எழுதப் பெற்றுள்ளன.

| | |
|---|---|
| புதிய முதல் பாடம் | 0—2—0 |
| புதிய இரண்டாம் பாடம் | 0—3—0 |
| புதிய மூன்றும் பாடம் | 0—3—6 |
| புதிய நான்காம் பாடம் | 0—4—6 |
| புதிய ஐந்தாம் பாடம் | 0—6—0 |

---

நல்லொழுக்க போதவர்க்கம்; நீதிவாக்கியக் கதைகள்.

| | | |
|---|---|---|
| உலகநீதி | நீதிவாக்கியக் கதைகள் | 0—2—0 |
| ஆத்திசூடி | நீதிவாக்கியக் கதைகள் | 0—2—0 |
| கொன்றைவேந்தன் | நீதிவாக்கியக் கதைகள் | 0—2—0 |
| வெற்றிவேற்கை | நீதிவாக்கியக் கதைகள் | 0—3—0 |
| [illegible]துரை | நீதிவாக்கியக் கதைகள் | 0—5—0 |
| [illegible]வழி | நீதிவாக்கியக் கதைகள் | 0-10—0 |

ஒவ்வொரு வகுப்பிற்கும் குறித்துள்ள செய்யுட்பாட வாக்கியங்களை மாணாக்கர்கள் நெட்டுருக்கொண்டு பதவுரை, கருத்துரைகளை மனனம் செய்தும், அவைகளின் கருத்துக்கள் மனதில் பதியாது நிற்கும் குறையை நீக்கும் நோக்கங் கொண்டு, கதைகளைப் படித்துத் தெளிவது, அக்கருத்தமைந்த வாக்கியங்களைக் கற்றல் கன்மேல்பதிந்த எழுத்தைப்போல் மனதில் நிலைபெறுமாறுஎழுதப் பெற்றுள்ளன. நல்லொழுக்கப் போதத்திற்கும் இவைநற்றுணையாகும். கதாவாசகப் புத்தகங்களாகவும் இவற்றை வழங்கலாம். காம்போஸிஷன்என்னும்பாஷாஞானபோதத்திற்கும் இவை ஏற்றவை.

RTR
1174

# ஜில்லா பூகோள வர்க்கம்.

இவை பசுமலை உயர்தர பாடசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் செ. ரா. சுப்பிரமணிய சர்மா அவர்களால் துரைத்தனத்தார் ஏற்படுத்திய புதிய விதிகளை அனுசரித்து எழுதப்பெற்று, தமிழ்நாடு முழுதும் பாராட்டப்பட்டு வருகின்றன.

| | | |
|---|---|---|
| மதுரை ஜில்லா பூகோள சாஸ்திரம் | | 0—5—0 |
| இராமநாதபுரம் ஜில்லா | ஷை | 0—5—0 |
| திருநெல்வேலி ஜில்லா | ஷை | 0—5—0 |
| திரிச்சிராப்பள்ளி ஜில்லா | ஷை | 0—5—0 |
| தஞ்சாவூர் ஜில்லா | ஷை | 0—5—0 |
| சேலம் ஜில்லா | ஷை | 0—5—0 |
| கோயம்புத்தூர் ஜில்லா | ஷை | 0—5—0 |
| வட ஆற்காடு ஜில்லா | ஷை | 0—5—0 |
| தென் ஆற்காடு ஜில்லா | ஷை | 0—5—0 |
| செங்கற்பட்டு ஜில்லா | ஷை | 0—5—0 |

இவற்றுள் அந்தந்த ஜில்லாக்களின் சரித்திரமும் பொதுவாய் அரசியலும் சுருக்கமாக எழுதிச் சேர்க்கப் பெற்றுள்ளன.

இதர ஜில்லாக்களின் பூகோளம் விரைவில் வெளிவரும்.

---

## உப பாடமாக வைக்கத்தகுந்த புத்தகங்கள்.

| | |
|---|---|
| கதையும் பாட்டும் 1, 2 பாகங்கள் தனித்தனி | 0—3—0 |
| இராணி மங்கம்மாள் சரித்திரம் | 0—1—0 |
| திருமலைநாயக்கர் சரித்திரம் | 0—2—0 |
| கிருஷ்ணன் தூது | 0—2—0 |
| பெரியார் பெருமை | 0—3—0 |
| கண்ணன் பாலலீலை | 0—6—0 |
| இராமாயண சாரசங்கிரகம் | 0—6—0 |
| பாரத சாரசங்கிரகம் | 0—6—0 |
| பாகவத சாரசங்கிரகம் | 0-10—0 |
| விராடநகரத்தின் ரகசியம் | 0-12—0 |
| விநோதக்கதைகள் | 0-10—0 |
| மாணவர் நீதிக்கதைகள் | 0—6—0 |
| நல்லொழுக்க போதம் | 0—6—0 |